# கிராமப் பொருளாதாரம்

550
DR. T. P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY.

★

ஐ. டி. சிதம்பரம், எம். ஏ.,
மாஜி பேராசிரியர்
கவர்ன்மெண்ட் கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்
கவர்ன்மெண்ட் கலைக்கல்லூரி, மங்களூர்

★

ஸ்டார் பிரசுரம்
௬, பெரிய தெரு
திருவல்லிக்கேணி :: சென்னை-5

பண்புப் புத்தகம்—5
முதற் பதிப்பு—மார்ச், 1956.
இரண்டாம் பதிப்பு—மார்ச், 1964.

விலை ரூ. 1-25

151809

STAR PUBLICATIONS
66, BIG ST.,
TRIPLICANE : MADRAS-5.

Sentamil Achakam Madras-14

## ஆசிரியர் முன்னுரை

வாழ்விற்கு வேண்டியவை இரண்டு முக்கியமான விஷயங்கள்—அருள் ஒன்று. பொருள் இரண்டு. கவிதையும் கலையும் சமயமும் அருளைக் கொடுக்கின்றன. பொருளைப் பற்றிப் பேசும் நூல் பொருளாதாரம். ஆனால் இவை யெல்லாம் வாழ்க்கையைச் சுற்றி ஒன்றோடொன்று பின்னி நிற்கின்றன. வாழ்க்கை என்பது ஒரு ரயில்வே என்ஜின் மாதிரியல்ல, பூட்டுப் பூட்டாகப் பாகங்களைக் கழற்றிவிட்டு, மறுபடியும் பூட்டுவதற்கு; வாழ்க்கையை அந்த விஷயத்தில் ஒரு பூவிற்கு ஒப்பிடலாம். நிறமும், மணமும், இதழ்களும், காம்பும், மகரந்தமும், தேனும் கொண்டது பூ. அதே மாதிரித்தான் பொருளாதாரமும், கலையும், காவியமும் சேர்ந்து ஒன்றாகி வாழ்க்கையாகக் காட்சி அளிக்கின்றன.

இந்தியப் பொருளாதாரம் மிகவும் புராதனமானது. அது வாழ்வாங்கு வாழ்ந்த மன்னர்களான கரிகாலன், அசோகன், குலோத்துங்கன், சந்திரகுப்தன், கிருஷ்ணதேவர், பிரோஸ் ஷா, ஷேர் ஷா, அக்பர், ஷாஜகான் இவர்கள் கையில் எவ்வளவோ மலை உயரத்திற்கு வளர்ந்து வந்திருக்கிறது. அந்நிலையில் இந்தியாவில் பொருளாதார ஞானமே சமீப காலம் வரையில்

இருந்ததில்லை என்று ஒரு சிலர் இன்றும் கூறி வருவது மிகவும் வியப்பான காரியம்.

சமீப காலத்தில் தான் இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு நெருக்கடியும் பிரச்னையும் ஏற்பட்டது. கால வெள்ளத்தில் தூர்ந்து போன சில அருங் கலைகளைப்போல், இந்தியப் பொருளாதாரமும் மேலை நாட்டு நாகரிகத்தின் ஆக்ரமிப்பிற்கு முன் நிற்க முடியாமல் தவழ்ந்தது. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியின் இப் புது நிலையை அறியாத சிலர், வாய்க்கு வந்தது கைக்கு வந்தது என்று ஒரு சில புத்தகங்கள் பொருளாதாரத்தைப்பற்றி எழுதினர்; மார்ஷல் போன்ற உன்னத ஆசிரியர்களுக்கு ஒப்பான நூல்கள் இந்தியப் பொருளாதாரத்தைப்பற்றி எழுதப்படவில்லை. பெரும்பாலும் அவர்கள் எழுதினது ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட மேலை நாட்டுக்குரிய பொருளாதார நூல்களே.

இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையையும் அதன் தனிச் சாயலையும் அதன் புது வளர்ச்சியையும் நன்கு உணர்ந்தவர் காந்தி அடிகள் ஒருவர்தான், காந்தி அடிகள் கண்ட இந்தியா, இந்தியாவின் ஆயிரக்கணக்கான கிராமங்கள்; அவரது இந்தியா ரயிலில் முதல் வகுப்பிலிருந்தோ அல்லது கவர்ன்மெண்டார் இளைப்பாறும் விடுதியிலிருந்தோ பார்க்கப்படவில்லை, அவர் கொடுத்துள்ள காந்தீயம் புது

இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளமாய் அமைகிறது.

பொருளில்லாதவனுக்கு இவ்வுலகமில்லை என்பது வள்ளுவன் வாய்மொழி. பொருள் தான் வாழ்க்கைக்கு ஆதாரமாய் அமைகிறது; கலைகளையும் பண்பாட்டையும் பெருக்கும் செவிலித் தாயாகவும் அமைகிறது. உழைப் பின்போது பல்வேறுபட்ட உயர்ந்த குணங் களும் லட்சியங்களும் முன் வந்தாலும் உழைப் பின் ஆதி காரணமாயிருப்பது பொருள் என் பதை யாவரும் மறுக்க முடியாது. பொருளை வைத்துத்தான் வாழ்க்கையே அமைகிறது. அந்நிலையில் கிராமத்தில் காணக் கிடக்கும் வருமானம் பொருள் நிலை குறித்தும் இயற்கை சிதறி வீசியிருக்கும் வசதிகளைப் பற்றியும் வருமானத்தை உயர்த்தும் நிலை குறித்தும் ஆராய முற்படுகிறது இந்நூல்.

பண்புப் புத்தக வரிசைக்கு என்னை அறி முகம் செய்து இந்நூல் எழ மிகுந்த உற்சாகம் காட்டின எனது மாஜிஸ்திரேட் நண்பர் ஸ்ரீ ராஜாராம் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக பிரதி முழுவதையும் படித்துப் பார்த்து, எனக்கு மிகுந்த ஊக்கமும் அவ்வப்போது அளித்து வந்த எனது நண்பர் திருவாளர் ல. ஷண்முகசுந்தரம் அவர்களுக்கு எனது வந்தனம்.

இந்நூலை ஸ்டார் பிரசுரத்தினர் ஆக்கு கிறார்கள்; அவர்களுக்கு என் நன்றி.

என்னை இப் பணியில் ஈடுபடும்படி தூண்டியவர்கள் பேராசிரியர் கனம் எஸ். வி, சிட்டிபாபு அவர்கள். அவர்கட்கு எனது உளம் நிறைந்த நன்றி.

கோல்டு மோகர்
இலஞ்சி, தென்காசி.
மார்ச், 10, 1956

ஐ. டி. சிதம்பரம்

DR. T. P. M. LIBRARY
KAMARAJ UNIVERSITY

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நம்நாடு | 9 |
| 2. | இந்திய விவசாயத்தின் சிறப்பு நிலைமை | 11 |
| 3. | நிலவளம் | 13 |
| 4. | நாட்டின் காட்டு வளம் | 18 |
| 5, | நாட்டின் நதிவளம் | 24 |
| 6. | நாட்டின் கால்நடை வளம் | 41 |
| 7. | நாட்டின் மக்கள் வளம் | 45 |
| 8. | கிராமக் கைத்தொழில்கள் | 48 |
| 9. | கிராம அமைப்பு | 54 |
| 10. | கிராமப் புணருத்தாரணம் | 61 |
| 11. | நாட்டின் வியாபாரம் | 73 |
| 12. | மக்கள் சக்தி | 75 |
| 13. | கிராம விளைபொருள்கள் | 77 |

DR. T. P. M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY

# கிராமப் பொருளாதாரம்

## 1

## நம் நாடு

இந்தியாவில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விவசாயிகள். கிராம இந்தியாதான் இந்திய தேசத்தின் அடித்தளமாக விளங்குகிறது. அதுதான் பூரண இந்தியா. அங்குதான் நாம் உண்மை இந்தியாவைப் பார்க்க முடியும். குடிசை அவர்களது சின்னம். உழவு அவர்களது வாழ்க்கை முறை. தறியும் ராட்டினமும் அவர்களது தொழில்கள். இதையொட்டி எழுந்து நிற்பது அவர்களது பண்பாடும் கவிதையும்.

அவர்களது வாழ்க்கை நலனை அறிய முற்படுவது இந்நூல்.

இந்திய நாடு மிக்க வளம் படைத்த நாடு. உலகத்திலே இல்லாத காட்டு வளமும் நீர்வளமும் படைத்தது இந்நாடு. எக்கோடையிலும் வற்றாத நதிகளையும், விதம் விதமான, கணக்கற்ற மரங்களையும், தாவர வர்க்கங்களையும், விலங்கினங்களையும், பாறை, உலோக வகைகளையும் உடையது இந்நாடு.

ஆயிரக் கணக்கான மைல்களுக்கு நீண்டு செல்லும் கடற்கரை நமக்கும் கடலுக்கும் உண்டான தொடர்பை வலுப்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கிறது. அபூர்வமான

மீன் இனங்களை உடையது இந்த தேசத்தைச் சுற்றியுள்ள கடற்பரப்புகள்.

ஆயிரமாயிரம் மைல்களுக்கு நீண்டு, அகன்று நிற்கும் வளங்குன்றாத சமவெளிப் பாங்குகள் நம்மிடமுள்ள வேறு சில பொக்கிஷங்கள்.

உலகில் காணும் எல்லாவிதமான சீதோஷ்ண ஸ்திதி நிலைகளும், இந்நாட்டில் பரந்து விளங்கக் காணலாம்.

இத்தகைய மாபெரும் பரப்புக்கு அணிகலனாக விளங்குவது முப்பத்து ஆறு கோடி மக்கள்.

இந்நிலையில் நம் நாட்டைவிட வேறு பாக்யமுள்ள நாடே இருக்க முடியாது என்று சொல்லிவிடலாம்.

ஆனால் எத்தகைய நாட்டிற்கும் இல்லாத ஒரு பெருங் குறை நம் நாட்டிற்கு உண்டு. அதுதான் வறுமை. இந்திய மக்கள் வறுமை நிலையை எட்டிப் பிடித்த மாதிரி வேறு எந்த மக்களுமே செய்ததில்லை என்று சொல்லிவிடலாம். **'வளத்திற்கு மத்தியில் வறுமை'** என்பது இந்நாட்டின் துரதிர்ஷ்டம்.

இந்தகைய சூழ்நிலையை அறிய முற்படுவது இந்நூல்

# 2

# இந்திய விவசாயத்தின் சிறப்பு நிலைமை

## நெற் பயிர்

மேலைத் தேசங்களில் மக்களை இருவகையாகப் பிரிக்கலாம்; வியாபாரம், தொழில் இவற்றைச் சார்ந்தவர்கள், விவசாயத்தைச் சார்ந்தவர்கள் என்று. ஆனால் நமது தேசம் சம்பந்தப்பட்ட வரையில் இவ்விதம் பிரிக்க இயலாது. நமது தேசத்தில் விவசாயமே வாழ்க்கை முறையாக அமைந்திருக்கிறது. வீடு, வயல், தொழில் மூன்றும் இந்திய விவசாயிக்கு ஒன்றுதான். அவன் கைத்தொழிலும் அவன் விவசாயத்தைச் சுற்றி வளர்ந்து வந்திருக்கும் பொருளே. கிராமக் கைத் தொழில்கள் தான் இந்திய பூமியில் விவசாயத்தைச் சுற்றி வளைந்து வந்திருக்கும் விளை பொருள்கள். சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இந்தக் கோட்பாட்டில் மிகுந்த ஒற்றுமையைக் காணலாம்.

இந்திய விவசாயிக்கு அவன் நிலம் தெய்வத்திற்குச் சமானம்.

பெரிய பெரிய கைத்தொழிற்சாலைகளில் அவன் வேலை செய்திருப்பினும் இந்திய நாட்டின் மகனுக்கு, அது வேறு, தன் வீடு வேறு என்ற உணர்ச்சி எளிதில் வரும். ஆனால் நிலம் சம்பந்தப்பட்ட வரையில் அவன் நிலை வேறு. முப்பதினாயிரம் வருடங்களாக இருந்து வரும் அந்தச் சாகுபடி அவனையும் அந்த நிலத்தையும் நன்கு பிணைத்து விட்டது. அந்தப் பிணைப்பின் பயன், அவன் தொழிற் சாலையில் ஓய்வு பெற்றாலும், வேலையை இழந்தாலும்

அவன் நிலத்தின் மீது விழுகிறான், நிலமும் ஏற்றுக் கொள்ளுகிறது.

மேனாட்டினரைப் போல நம் நாட்டில் பெருவாரியான விவசாயங்கள் அநேகம் கிடையாது. லாபத்திற்காகப் பயிர்களும் கிடையாது. ஒரே விதமான பயிரில் கவனம் முழுவதும் கிடையாது.

இந்திய விவசாயம் அநேகமாக நடைபெற்று வருவது சிறு சிறு துண்டு நிலங்களில். உணவு தான்யமும், காய்கறி வகைகளும், ஆடு மாடுகளும், கோழியும், அவன் விளைவிக்கும் பொருள்கள். நெல்தான் அவனது முக்கிய பயிர். வானம் பலமுறை பொய்த்தாலும், பக்கத்து நாடுகளில் வேறு வேறு பொருள்கள் விரும்பி வரவேற்கப்பட்டாலும், அவன் நெற் பயிரையே சார்ந்து நிற்கும் பெருமை வாய்ந்தவன். அவனுக்கு விவசாயம் வாழ்க்கை முறை.

நெற் பயிர் அவன் சமய சமூக வாழ்க்கையிலும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். பொங்கல் திருநாள், நமது நாட்டினர், உழவைப் போற்றிக் கொண்டாடும் ஒரு ஒப்பற்ற திருநாள். நெற் கதிர்களினால் வீட்டை அலங்காரம் செய்யும் முறை, நமக்கும் விவசாயத்துக்கும் தொன்றுதொட்டிருந்து வந்திருக்கும் சம்பந்தத்தைக் காட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது.

# 3

## நிலவளம்

மிகவும் அகன்று நிற்கும் மாநில நிலப்பரப்புகள் நாட்டுக்கே ஒரு பெருமிதத்தைக் கொடுக்கும் வண்ணம் இருக்கின்றன. பெரிய வகையான ஜீவ நதிகளின் தண்ணீர் வாய்க்கால்களின் வழி ஆங்காங்கே ஓடி நாட்டின் பல பல பாகங்களைச் செழித்த தானியக் களஞ்சியங்களாக்கியிருக் கின்றன. கரிசல் பூமியும் சரல் பாங்கான நிலங்களும், பருத்தியும் பழவர்க்க மரங்களும் காடுகளாக வளரப் பயன் பட்டிருக்கின்றன. பள்ளத்தாக்குகள், காபி, தேயிலை, மருந்து மூலிகைகள், கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், அநேக காட்டு மரங்கள் வளர்ந்து செழிக்கும்படி நிற்கின்றன.

ஆனால் இவ்வளவு வசதிகளுக்கு மத்தியிலும் யாவரும் வியாகூலப்படும்படி நிற்பது இன்னும் கலப்பையின் ஆதிக் கத்துக்கு வராத பெருவாரியான நிலங்களே. புதர்களும் கற்களும் நிறைந்த பெரிய பெரிய செம்மண் காடுகள், ஆங் காங்கே பனைகள் மட்டும் நிற்கும் பெரும் மணல் பரப்பு கள், சகதி மடிந்து கிடக்கும் சதுப்பு நிலங்கள், இவை நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வண்ணம் அமைந்திருக்கின்றன. நாட்டின் நிலவளத்தில் மூன்றில் இருபாகங்கள் தான் நாம் உபயோகித்திருக்கிறோம். மற்றைய ஒரு பாகம் கட்டாந்தரையாக நிற்கிறது.

உபயோகத்திலிருக்கும் நிலங்களும், நாட்டின் பொரு ளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கும் வண்ணம் அமைய வில்லை. பொருளாதார நெருக்கடிகளை உண்டு பண்ணும் விதமே அமைந்திருக்கின்றன. ஒன்று, இந்தியாவிலுள்ள

பெருவாரியான நிலங்கள் ஒரு சில நபர்கள் கையில்தானிருக்கின்றன. லட்சக் கணக்கில், மக்கள் நிலமில்லாமல் இருக்கின்றனர். நிலத்தில் வேலை செய்யும் கூலி ஆட்களாகவே, அவர்களது காலம் கழிகிறது. பயிர் இடுபவனுக்கு, சொத்தும் சுதந்திரமும் இல்லை என்று சொல்லும் பொழுது, அவனது உழைப்பும் உற்சாகமும் பாதிக்கப்படுகிறது. அவர்கள் நிலைமை சரியாகக் கவனிக்கப்பட்டால்தான் பொருளாதார உலகில் செழிப்பு ஏற்பட ஏதுவிருக்கிறது. நிலச்சுவான்தார்களுக்கும், நிலத்திற்கும் அநேக இடங்களில் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. அநேகர் சுக ஜீவிகளாய் பட்டண வாசத்தை விரும்புகின்றனர். அவர்களோ நிலத்தைக் காப்பாற்றப் போகும் பெருமக்கள்? இங்கிலாந்து தேசத்தில் போலல்லாமல், நமது நாட்டில், நிலச்சுவான்தார்கள், ஆங்காங்கு ஒரு சிலரைத் தவிர, பொதுவாகத் தங்கள் கடமையில் தவறியும், கடமையை மறந்தும் விட்டனர். புது முறைகளை விவசாயத்தில் கையாளுவதோ, பல கிராமங்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய உதவியைச் செய்வதோ, கிராமத்திற்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதோ அவர்களுக்கு இயலாததாய் விட்டது. நாட்டில், நிலச்சுவான்தார்களுக்கும், நிலமில்லாத வேலையாட்களுக்கும் மத்தியில் நின்று, சிறு சிறு துண்டுகளில், தனது கலப்பைக்கும் போதாத இடத்தில் காலம் கழித்து வரும், சிறு விவசாயிகளின் நிலைமை எவ்வளவோ, சிக்கல்களையும் கஷ்டங்களையும் உண்டு பண்ணும் விதம் இருக்கிறது. நம் நாட்டின் பண்பாட்டையும் பெருமையையும் காப்பாற்றி வரும் மக்கள் இவர்கள். அவர்களது கஷ்டங்கள் நாட்டின் நன்மையையே அழித்துவிடும் நிலைமையிலிருக்கின்றன. முதலில், அவர்களுக்கு இருப்பது, மிகவும் குறைந்த அளவு பூமி. தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றுவதற்குக்கூட இயலாத அளவு பூமி; தனது மாட்டையும் கலப்பையையும்கூட முழுக்கப் பயன்படுத்திக் கொள்ள

முடியாத பூமி. நிலம் மிகச் சிறியதாயிருக்கும்போது வரப்பு மிதிக்கும் பொழுது, ஒரு அங்குல இடம் பாதிக்கப்பட்டாலும், அடுத்தடுத்துள்ள மக்களுள் சண்டைகள் வளர்ந்து அடர்ந்துவிடும். நீர்ப் பாசன வசதிகளோ, புதுமுறை விவசாய வசதிகளோ நினைப்பதற்குக்கூட இல்லாத நிலையிலுள்ள அந்த மிகச் சிறு அளவில் பூமி அமைந்திருப்பது நாட்டிற்குப் பெருங்குறையாயிருக்கிறது. விவசாயியை, பயிர் நன்கு விளைந்த காலத்தும், வறுமை நிலையின் படுகையிலே வைத்திருக்கிறது. அது நாட்டின் பெரும் துரதிர்ஷ்டமே. துரைத்தனத்தார்தான் இந்தக் குறையை நிவர்திக்க முடியும். நாட்டின் பல்வேறு பாகங்களிலுள்ள, பழக்க வழக்கங்களைக் கொண்டு, ஒவ்வொரு பாகத்திலும் குறைந்த அளவுள்ள பூமி இவ்வளவுதான் இருக்கலாம் என்று துரைத்தனத்தார் நிர்ணயம் செய்யவேண்டும். அந்த அளவு, ஒரு விவசாயி, தனது உழைப்பால் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் நல்ல வாழ்க்கை முறை தேடிக் கொள்ள வகை செய்வதாய் அமைந்திருக்க வேண்டும். குறைந்த அளவு நிலம் நிர்ணயமானவுடன், இப்பொழுதுள்ள துண்டு நிலங்கள் எல்லாம் ஆங்காங்குள்ள பொது ஜனப் பிரதிநிதிகளையும் பிரமுகர்களையும் கொண்டு திருத்தப்படல் வேண்டும். இவ்வாறு ஒரு சமயம் திருத்தப்பட்ட நிலம் மறுமுறை பங்கீடுக்கு வராதவாறு பாதுகாப்பும் ஏற்படுத்தவேண்டும். நிர்ணய அளவில் வந்த நிலம் கடன் காரணத்தாலோ, கால முறையிலோ பிரிக்கப்படாமலிருக்க, ஆங்காங்குள்ள, மக்கள் சங்கங்களும் துரைத்தனத்தாரும் ஆவன செய்யவேண்டும்.

சிறு விவசாயிகளது அடுத்த பெரும் குறை, என்றும் கடனில் மூழ்கி இருக்கும் அவர்களது சிக்கலான, கஷ்டமான வாழ்க்கை முறையும் நெருக்கடியும். இந்திய விவசாயி, கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனையே மக்களுக்கும் கொடுத்து, கடனிலேயே இறக்கிறுன் என்று

சொல்லுவார்கள். அது உண்மையான விஷயம். சாதாரண காலத்தும் போதிய வருவாயில்லாத அவனுக்கு, குடும்பத்தில் ஒரு கல்யாணமோ அல்லது ஒரு சாக்காடோ வந்துவிட்டால், அல்லது மேகம் ஒரு தடவை தவறிவிட்டால், அல்லது சிலவிடங்களில், பெரும் நிலச்சுவான்தார்களின் விஷமத்தால், தனது வாழ்க்கையை நடத்தப் போதிய நிலமில்லாமலும், வயலில் வேலையில்லாத காலத்தில் தன்னையும் தன் குடும்பத்தினரையும் காப்பாற்றக் கைத்தொழில் வசதி இல்லாத காரணத்தாலும், சிறு விவசாயி எளிதில் பெரும் முதலாளியிடம் கடனுக்கு ஆளாகிறான். அந்தக் கடனிலிருந்து அவன் நிலம் அவனை விட்டுப் போகும் வரை, அவன் ஆயுசு காலத்தில் மீளப் போவது கிடையாது. அவன் விழுகிறான். அவன் விழும்பொழுது அவன் கூடவே நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளத்தில் ஒரு கல்லும் விழுகிறது. நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் இந்தநிலைமை மாற வேண்டும். பெரும் நிலச்சுவான்தார்களிடமிருந்து, சிறு நிலச்சுவான்தார்களைக் காப்பாற்றுவது துரைத்தனத்தாருடைய பொறுப்பு. சிறு விவசாயிகள், கயல் மீன்கள் அல்ல விழுங்கிவிடுவதற்கு. கூட்டுறவுச் சாலைகள் மூலம் கடன் விநியோகம் அதிகவட்டி வாங்காமலிருக்க வேண்டிய சட்ட வசதிகள், அதைக் கண்காணிக்க மக்கள் சபைகள், இவை அவசியம் ஏற்பட வேண்டும். கடன் காரணமாக நிலத்தைச் சேர்ப்பது கூடாது என்று துரைத்தனத்தார் ஏற்படுத்தினால் கண்மூடித்தனமாக சிறு விவசாயிகள் கடன் வாங்குவதும் அந்தரங்கக் காரணங்களுக்காகப் பெரும் முதலாளிகள் கடன் கொடுப்பதுமாகிய காரியம் நிற்கும். அதுவரையில் இந்தத் தொல்லை நிற்க ஏதுவில்லை.

தகுந்த ஆதரவாளரில்லாத காரணத்தாலும், பண வசதிக் குறைவாலும், மக்களது பழக்க மாறுதல்களினாலும், ஆதரவுக் குறைவினாலும் அழிந்துபோன இந்திய

கிராமக் கைத்தொழில்கள், அந்தச் சிறு விவசாயிக்கும் அவன் குடும்பத்திற்கும் கொடுத்து வந்த ஒரு பக்க ஊதியத்தை எடுத்து விடுகின்றன. 'கதர் நெய்யுங்கள், கதர் உடுத்துங்கள்' என்று இது காரணமாகவே காந்தி மகான் சொன்னார். நாட்டின் வறுமையைப் போக்குவதற்கு, கிராம இந்தியாவின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு, குடிசை வாசிக்குக்கூட ஒரு பங்குச் சோறு கொடுப்பதற்கு, கதர் கட்டுங்கள் என்று சொன்னார். ஆனால் சமூகம், தன் வழியே செல்லும் மனப்பான்மையிலிருக்கிறது. கதர் கட்டவும் தெரியாது. வறுமையைப் போக்க வேறு வழியும் தெரியாது. சிறு விவசாயிகளுக்கு ஆறுமாதம் வேலை கிடையாது. பாக்கி மாதங்களிலும் அவன் குடும்பத்தினர் சாணி பொருக்கியும் விறகு சுமந்தும் காலம் கழிக்க வேண்டிய நிலை. அவனது சிறந்த, தலைமுறை தலைமுறையாக வந்த, பண்பாட்டோடு இயைந்த அவன் கைத்தொழில்கள்-சிற்ப வேலை, மர வேலை, பாய், நார் வேலைகள், தந்தச் சாமான்கள்-அவன் கைத் திறன் எல்லாம் எங்கெங்கோ மறைந்து விட்டன. கிராமக் கூட்டுறவுக் கைத்தொழிற் சங்கங்கள்தான், இந்த நிலைமையை மாற்றிச் சிறு விவசாயிக்கு மீண்டும் அவனது நல்வாழ்வை அளிக்க முடியும். காரணமில்லாமல் புதுமைக்கும், ஐரோப்பாவிற்கும் மக்கள் திரும்பும் மனப்பான்மை மாறவேண்டும். நம்மிடமிருக்கும் அரிய சொத்துக்களை நாம் ஆற்றிலெறிந்து விட்டால், நமக்கு வேண்டிய காலத்தில் யார் எதைக் கொடுப்பார்கள்?

இவ்வளவு சிக்கல்களுக்கு மிடையே தத்தளிக்கிறது நமது கிராமப் பொருளாதாரம். நாட்டில் நிலவளத்தைச் சுற்றி நிற்கும் புதிர்கள் இவை. இவை தீர்க்கப்படாவிட்டால் நாட்டிற்கு க்ஷேமமும் பொருளாதார ஸ்திரமும் ஏற்படப் போவதில்லை.

# 4

## நாட்டின் காட்டு வளம்

வானளாவிய மலைகளும் அடர்ந்த காடுகளும் இயற்கை, இந்தியாவிற்குக் கொடுத்திருக்கும் ஒப்பற்ற சாதனங்களில் ஒன்று. பலா, கொய்யா, மாதுளை, மா, பம்பிளிமாஸ், மாங்குஸ்தான் போன்ற பழ வகைகளும், எண்ணற்ற மூலிகைகளும், காப்பி, தேயிலை, கொக்கோ போன்ற செடிகளுக்கு ஏற்ற பெரிய பெரிய தோட்டங்களும், மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய், கிராம்பு, வெற்றிலைத் தோட்டங்களும், மூங்கில், சணல், ஈத்தக்களி, தேக்கு, கோங்கு முதலிய காடுகளும், எண்ணற்ற பிராணி வகைகளையும், பாறை வகைகளையும் தாவரவர்க்க வகைகளையும் கொண்டுள்ளவை இந்நாட்டினது காடுகள். மேல் மண்ணின் செழிப்பைத் தாங்குவதும், நீர்ப் பெருக்கைத் தனது உதிர்ந்த இலைகளில் தாங்கி, வற்றுமல் காட்டாற்றின் வளத்தைக் காப்பதும், வெள்ளப் பெருக்கினுலோ, மேல் காற்றின் சேதத்தினுலோ நிலம் கீறுபட்டு வீணுகாமல் காப்பதும் இந்தக் காடுகள் செய்து வரும் சில அற்புதமான கைங்கரியங்கள். இக்காட்டிலே எதேச்சையாக வளரும் புல்கள், எத்தனையோ வீடுகளில் கூரைகளாகவும், பசுக்களுக்கு உணவாகவும் பயன்படுகின்றன.

சிறுவர் சிறுமியர் பசும்புல் தரைகளுக்கு, எவ்வளவோ தூரத்துக்கப்பால், மாடுகளை ஓட்டிச் செல்லுகின்றனர். புல் முழுவதும் அத்தரையில் ஓய்ந்துவிட்டபிறகு, அந்தப் புற்றரையின் பரப்பைச் சுற்றிலும் செடி கொடிகளை நன்ருகச் செதுக்கிவிட்டு விட்டு, பின் அதற்குத் தீ வைத்து விடுகின்றனர். தீயின் வெப்பத்தில் உலர்ந்த புல்

உரமாகிறது. பின் மற்றொரு புல் பிரதேசத்திற்கு அவர்கள் மாடுகளை ஓட்டிச் செல்லுகின்றனர். அடுத்த மழையில் மீண்டும் அது ஒரு பசும்புல் தரையாக மிளிர்கிறது. ஆனால் காட்டுத் தீ பரவாமல் இருப்பதற்கும், புல் உலர்ந்த இடத்தைத் தவிர வேறு இடம் பாதிக்கப் படா வண்ணமும் பார்த்துக்கொள்வது அவர்கள் பொறுப்பு. அதை அவர்கள் செவ்வனே செய்கின்றனர். காட்டுப் புல்கள் கூரைகளுக்கு உபயோகப்படுங்கால் அங்குள்ள சீதோஷ்ண நிலையை சமமாக்குகின்றது.

விறகும், கரியும், உலோக வகைகளும், தோலும், தேனும், தந்தமும், சந்தனமும், கொம்பு வகைகளும், மஞ்சளும், கஸ்தூரியும் இக்காடுகள் கொடுக்கும் வேறு சில பொருள்கள். இரத்தக்கட்டு, நரம்புத் தளர்ச்சி, வாதம், க்ஷயம், இருதய ரோகம், நீர்ப்போக்கு, குஷ்டம் போன்ற கொடும் வியாதிகளைப் போக்கவல்ல மருந்து வகைகள் காணக்கிடைப்பதும் இங்கேயே. இத்தகைய நம் தேசத்து எண்ணற்ற மலைகளும், காடுகளும், சிறந்த சுக வாசஸ்தலங்களாகவும், ஆரோக்கிய வாசஸ்தலங்களாகவும் பயன்படுகின்றன. குற்றாலம், கொடைக் கானல், உதகமண்டலம், ஏற்காடு, பீர்மேடு, நைனிடால், டார்ஜிலிங், ஸிம்லா போன்றவை அதிமுக்கியமானவை. தங்கள் விடுமுறைகளைக் கழிப்பதற்கும், கோடையைக் கழிப்பதற்கும், சுகாதாரத்தின் பொருட்டும், அமைதியின் பொருட்டும், நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் வருகின்றனர். எத்தனையோ கவிகளும் கலைஞர்களும், வேதாந்திகளும் கூடுகின்றனர். தத்துவ விசாரணை நடைபெறுவதும் இந்தக் காடுகளிலேயும் அதைச் சார்ந்த ஊர்களிலேயுந்தான். இத்தகைய உயர்ந்த காட்டுச் செல்வத்தை ஏராளமாகப் பெற்றிருப்பது நமது தேசம். இமயமலைச் சாரல் உலகத்திற்கே இல்லாத பெருமையை நமது நாட்டிற்குக் கொடுக்கிறது. பஞ்சாப், ராஜபுதன மாகாணக்

காடுகளில் 'பேபுல்', குர்ஜான்', என்ற உயர்ந்த ஜாதி மரங்கள் அதிகம். இமயத்தின் அடிவாரம், தக்ஷிணம், தென் இந்தியக் காடுகள் ஆகிய இடங்களில் தேக்கும் ஸால விருக்ஷங்களும், மைசூர், குடகு, நீலகிரிக் காடுகளில் யூகலிப்டஸ், சந்தனம், பாதக், தோதகத்தி போன்ற மரங்களும் அஸ்ஸாமிலும் இமயத்தின் உயரத்திலும் 'ஓக்', மரங்களும் பலவகைப்பட்ட பைன் மரங்களும் மிகுதியாகக் காணலாம்.

நமது தேசத்தில் மொத்தம் 1,60,356 சதுர மைல்கள் காடுகள். அதாவது தேசத்தின் மொத்த நிலப்பரப்பில் காற்பங்கு, (25·2%) அதில் 1,04,670 சதுர மைல் காடுகள் இராஜாங்கத்தாராலும், 55,282 சதுர மைல் காடுகள் தனிப்பட்டவர்களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் காட்டு வளத்தைப்போல் உலகில் வேறெந்தப் பாகத்திலுமே கிடையாது. நமது தேசத்துக் காடுகளின் பரப்பு பின்வருமாறு மாகாணங்களிடையே பிரிந்து கிடக்கிறது.

| | மொத்தப் பரப்பு (சதுர மைல்) | காடுகள் (சதுர மைல்) | சதவீதம் |
|---|---|---|---|
| ஆஜ்மீர் | 2,367 | 593 | 25·1 |
| அந்தமான் நிக்கோபார் தீவுகள் | 2,500 | 2,500 | 100 |
| அஸ்ஸாம் | 55,445 | 21,637 | 39 |
| பீஹார் | 69,745 | 9,947 | 14 |
| பம்பாய் | 76,026 | 12,872 | 16·9 |
| மத்தியபிரதேசம் | 98,573 | 47,057 | 47·7 |
| குடகு | 1,582 | 1,175 | 74·3 |
| கிழக்கு பஞ்சாப் | 38,780 | 4,761 | 12·3 |
| மதராஸ் | 1,25,163 | 33,666 | 26·9 |
| ஒரிஸா | 32,695 | 4,492 | 13·7 |
| உத்தரபிரதேசம் | 1,06,248 | 17,372 | 16·4 |
| மேற்கு வங்காளம் | 28,212 | 4,284 | 15·2 |

நமது நாட்டிற்கு, காட்டு வசதிகள், ஏராளமாயிருந்த போதிலும் இன்னும் அதிகம் வேண்டியதாயிருக்கிறது. உஷ்ண மண்டலத்தில் உள்ள நாடுகளுக்கு ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருந்தால்தான், உஷ்ணத்தின் வெம்மை நாட்டைத் தாக்காதிருக்கும் என்று ஆராய்ச்சியாளர் கணக்கிட்டிருக்கின்றனர். அதன்படி, நமது நாட்டில் காட்டின் அபிவிருத்தி இன்னும் எவ்வளவோ வேண்டும். எங்கும் காடுகளாயிருந்த காலத்தில், ஜன சமுதாயத்தின் குடியேற்றத்திற்கும், சௌகரியத்திற்குமாகக் காடுகள் அழிக்கப் பட்ட நிலை தவறுனதில்லை. ஆனுல் இன்றைய நிலை வேறுவிதம். குடியேற்றத்திற்கு ஏராளமான தரிசு நிலங்கள் கிடக்கின்றன. காடுகளின் விருத்தியில்தான் சமுதாயத்தின் கண்ணேட்டம் நிற்க வேண்டும். காடுகளுக்குள் சமுதாயத்தின் குடித்தன விரிவு ஏற்படும் அவசியம் ஏற்படின், அதற்கு ஈடு செய்வதற்குக் காடுகளுக்கு, சமுதாயம், வேறு நிலம் விரிவுக்குக் கொடுக்க வேண்டும். காட்டின் செழிப்பைப் பொருத்தே, கட்டப்பட வேண்டிய இன்னும் எத்தனை எத்தனையோ கட்டிடங்கள், ரயில் நிலையங்கள், தொழிற்சாலைகளின் எதிர்காலம் நிற்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. காற்றின் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினுலோ விரிந்து கொண்டிருக்கிற தார் பாலை நிலத்தின் மணற் பரப்பைத் தடுப்பதற்கு, இராஜஸ்தான் பாலை நிலத்தின் எல்லையில் காடுகள் வளர்ப்பதற்கு, முதல் சேசிய ஐந்து வருஷத்திட்டத்தில், அரசாங்கம் நிதி கொடுத்து, காட்டியுள்ள முயற்சி மெச்சத்தக்கது.

தேக்கும், சந்தனமும், தோதகத்தி, பாடக், குர்ஜான், தியோதர், எபனி, கருங்கட்டை, யூகலிப்டஸ் மரங்களும் மேன்மேலும் மிகுதியாக இந்த தேசத்துக் காடுகளில் பயிரிடப் படவேண்டும். அந்நிய நாடுகளில் அவைகள் மிகவாய் விரும்பப் படுகின்றன. மிளகு, கிராம்பு,

ஏலக்காய், இந்தியா மேலே நாடுகளுக்குத் தொன்று தொட்டுக் கொடுத்து வரும் விளை பொருள்கள். காப்பியும் தேயிலையும், ஏராளமாக நம் நாட்டில் உற்பத்தி செய்யப் பட வேண்டும். இயற்கை வேண்டிய வசதிகளை வீசி எறிந் திருக்கிருள். மனித முயற்சியின் ஆக்கம்தான் மிகுதியும் வேண்டும். சிறந்த இந்தத் தோட்டங்கள் பண்படுத்தப் படுமாளுல் நாட்டுக்கு வருமானமும், மக்களுக்கு வேலையும் அவை மிகுதியாகக் கொடுக்கும்.

இந்தத் தேசத்துக் காடுகளில், மலை ஜாதியினர் (காட்டு ஆட்கள்) ஆங்காங்கே வசிக்கின்றனர். அவர் களுக்கு வேண்டிய சௌகரியங்கள் துரைத்தனத்தார் செய்து கொடுத்து, அவர்கள் மூலமாகவே, காட்டில் கிடைக்கும் பல்வேறு பண்டங்களை அரசாங்கம் பெற்றுக் கொள்ளலாம். காட்டிலே பிறந்து, காட்டிலே வளர்ந்து, காட்டிலே வாழ்க்கை நடத்தும் அவர்களைவிட அரசாங்கத் தாருக்கு, காடுகள் சம்பந்தமான தகவல் கொடுப்பதற்கும், ஆலோசனை சொல்வதற்கும், காட்டுப் பொருள்களை சேகரம் செய்து கொடுப்பதற்கும் வேறு ஆட்கள் இருக்க முடியாது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் அரசாங் கம் அமைத்துக் கொடுக்க வேண்டும். காடுகளைக் காப் பாற்றி, அபிவிருத்தி செய்வது, நாம் எதிர்கால மக்களுக்கு, வருங்கால சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய கடமை. காடுகள் என்றுமுள்ளவை. சமுதாயத்தின் முக்கிய பிரந்தரச் சொத்துக்களில் முதன்மையானது. அதைக் காப்பது அரசாங்கம் மட்டுமல்ல, நம் எல்லோ ருடைய பொறுப்புமாகும்.

காடுகளைப் பராமரிப்பது என்பது துரைத்தனத் தாருக்கே அவ்வளவு இலகுவான காரியமன்று. மக்களின் ஒத்துழைப்பு ஏராளமாக வேண்டும். ஆங்காங்கு பெரிய பெரிய காட்டுப் பிரதேசங்களை அடுத்து, காட்டு இலாகா நிர்வாகஸ்தர்கள் ஆலோசனைக்கும் உதவிக்கும் மக்கள்

சபைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும். அந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்குத்தான் அந்த அந்தக் காடுகளின் சகல விவரங்களையும் எளிதில் அறிய முறியும். இதைத் தவிர, நாடெங்கும் காட்டிலாகா ஆராய்ச்சி சாலைகள், அங்கங்குள்ள கல்லூரிகளின் துணை கொண்டும், பொது மக்கள் துணை கொண்டும் நிறுவப்படல் வேண்டும். அங்கங்கு கிடைக்கும் பொருள்களைப் பற்றிய விவரம் தெரியவும், தாவர வர்க்கங்களைப்பற்றிய நுட்பமான உண்மைகள் தெரிய வரவும், காடுகளின் பொது அபிவிருத்திக்கும் இவ்வாராய்ச்சி சாலைகள் பெரிதும் பயன்படும்.

# 5

## நாட்டின் நதிவளம்

இந்திய நாட்டின் அதிசிறந்த காட்டு வளத்தை ஒட்டி நிற்பது நாட்டின் நதிவளம். பனிமலையால் வளம்படுத்தப் படும் என்றும், எக்கோடையிலும் வற்ருத நதிகள் நம் தேசத்திலுண்டு. அத்தகைய நதிகளான ஜீலமும், சீனுபும், கங்கையும், யமுனையும், பிரமபுத்திரையும், பஞ்சாப், உத்திரபிரதேசம், பீஹார், வங்காளம், அஸ்ஸாம் மாகாணங்களை அழகுபடுத்துகின்றன. மற்றும் பாகீரதி நதி, பீஹார், வங்காளப் பிரதேசங்களையும், மஹாநதி, ஒரிஸா மாகாணத்தையும், நர்மதை, தப்தி நதிகள் மத்திய மாகாணத்தையும், கோதாவரி மஹாராஷ்டிரத்தையும் ஆந்திராவையும், கிருஷ்ணா, துங்கபத்திரை, மைசூர், மதராஸ் சமவெளிகளையும், காவிரி, வைகை, பெண்ணை, தாமிரவருணி, தமிழ் நாட்டையும் செழிக்க வைக்கும் காருண்ய நதிகளாக விளங்குகின்றன. சாம்பல் நதி இராஜஸ்தானம் முழுவதும் பாலை வனமாகி விடாமல் காத்து நிற்கிறது.

நீர்ப்பாசனத்திற்கும், ஜல மின்சாரத்திற்கும், போக்கு வரத்துக்கும், உபயோகப்படுத்தக்கூடிய இவ் அரிய தண்ணீர் வசதிகள் முழுவதும் இந்நாட்டில் பயன் படுத்தப்படுமானல், நீர்ப்பாசனம் ஜல மின்சாரம் மிகுதும் விருத்தி செய்திருக்கும் உலக வல்லரசு நாடுகளில், இந்தியா முதன்மையாக நிற்கும் என்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டி யிருக்கின்றனர்.

ஆனல் நாம் இதுவரைக்கும், இந்த வசதிகளில் பயன் படுத்திக் கொண்டது மிகமிகக் குறைந்த அளவே. (6 சதவீதம் மட்டும்)

முதல் தேசிய ஐந்து வருஷத் திட்டத்துப் பெரு முயற்சிகளான பெரும் பெரும் நீர்த் தேக்கங்களும், கால் வாய்களும், ஜல மின்சார சாலைகளும், நிர்மாணம் செய்து முடிந்து, வேலை செய்ய ஆரம்பிக்கும்பொழுது இந்நிலைமை மாறும். தேசத்தின் பெரும்பான்மையான இயற்கையின் வசதிகளைப் பயன்படுத்திக்கொண்ட பாக்கியம் பெற்றவர் களாவோம்.

இந்திய தேசத்தில் 25 கோடி 10 லட்சம் ஏக்கர்கள் இன்று பயிர் விளையும் பூமியாயிருக்கிறது. ஆனால் அதில் 480 லட்சம் ஏக்கர்களுக்கு மட்டுமே நீர்ப்பாசன வசதிகள் இருக்கின்றன. (அதாவது 19 சத வீதம் பங்குக்கு மட்டும்)

நமது தேசத்தின் நீர்ப்பாசன வசதியைப் பொறுத்துத் தான் நாட்டின் நிலவளம் நிற்கிறது. தேசத்திற்கு வேண்டிய, ஏராளமான உணவுப் பொருள்களை நிலம் கொடுப்பதற்கோ, அல்லது நாட்டின் ஆலைகளுக்கும் தொழில்களுக்கும் வேண்டிய மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கோ, அந்நிய நாடுகளுக்குப் பண்டமாற்று முறையில் வேண்டிய பொருள்கள் அனுப்புவதற்கோ அடித்தளமாய் விளங்குவது நீர்ப்பாசனம்.

இதைத் தமிழ் அரசர்கள் நன்கு அறிந்திருந்தனர். பாண்டிய நாட்டின் வளத்தைக் குறிப்பிடும்பொழுது கவி எழுதும் அற்புதமான பாடல் ஒன்று நிலத்தின் வளம் என்பதற்கு இலக்கணம் கூறுவதுபோல் அமைந்திருக் கிறது! இராஜதந்திரி நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையை நினைவூட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது. வைகை நதிக்குச் சொன்னது நாம் கங்கைக்கும் யமுனைக் கும், கோதாவரிக்கும், நர்மதைக்கும், கொள்ளிடத் திற்கும், பொருனைக்கும் பொருந்தும்படி செய்தால்,

நாட்டில் பஞ்சமே ஏற்படாது என்ற தோரணையில் அமைந்திருக்கிறது கவி.

**"நாரி இடபாகருக்கு**
**நஞ்சளித்த பாவியென்று**
**வாரியிடம் சேராத**
**வையையே—பாரில்**
**இடத்தும் வலத்தும்**
**இருபுறத்தும் சென்று**
**நடத்தும் தமிழ்ப்பாண்டி**
**நாடு."**

சோழ அரசர்கள், காவிரியையும், கொள்ளிடத்தையும், ஜீவ நதிகளாக்கினர். "தார்வேந்தன் சோழனே, மண்ணுவதும் சோழ மண்டலமே" என்று அந்நதிகள், அம் மன்னர்களுக்குப் பெருமை தேடித் தந்தன. இதையொட்டி முகல் மன்னர்கள் காலத்திலும், அதற்குமுன் டில்லி சுல்தான்கள் காலத்திலும், நாட்டில் நதிவளம் குன்ருதவாறு அவர்கள் காத்து, மேன்மேலும் நில வளத்தை வளர்த்தனர். யமுனைக் கரையை ஒட்டி பெரிய பெரிய ஏரிகளும், யமுனை கங்கைக் கால்வாய்களும், முகலாயச் சரித்திரத்தை இன்றும் நினைவு கூறும் சின்னங்களாய் நிற்கின்றன. ஷாஜஹான் சரித்திரத்தை இன்றும் நினைப்பூட்டுவது தாஜ்மஹாலும் மயிலாசனமும் மட்டுமல்ல, யமுனை கங்கைக் கால்வாய்களும் கூடவே.

ஆங்கிலேயர்கள் காலத்தில், கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை அவர்கள் நீர்ப்பாசன வசதிகளுக்குக் காட்டவில்லை. அது ஒரு பெரும் குறையாக அவர்கள் சரித்திரத்தில் நிற்கிறது. ஆயினும் இங்கும் அங்குமாக வெவ்வேறு திட்டங்கள் வகுத்து அவைகளை நிறைவேற்

றினர். பஞ்சாப் கால்பாசனம், யமுனைக் கால்பாசனம், பெரியார்த் திட்டம், மேட்டூர்த் திட்டம்—அவற்றில் முக்கியமான சில திட்டங்கள்.

மழையை எதிர்பார்த்தவண்ணம் நிற்பது இந்திய விவசாயம். மழை தொடர்ந்து சில வருடங்கள் தவறி விட்டால், எவ்வாறு நிலம், அங்குள்ள மக்கள், அவர்களது பொருளாதாரம், வாழ்க்கை முறை எல்லாம் பாதிக்கப்படுகின்றன என்பது நாம் யாவரும் சாதாரணமாய்ப் பார்க்கும் விஷயம். மழை நிலையின், மாறுதல்களும், நமது தேசத்தின் வறுமைக்கு ஒரு காரணம். இந்த மழையின் மாறுதல் நிலைகளை நாம் சமாளிப்பதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. அது, இந்தத் தேசத்தின் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதுதான்.

மேலும் நம் தேசத்தில் எங்கும் ஒரே அளவு மழை கிடையாது. இமயத்தை ஒட்டிய பிரதேசங்களிலும் மேற்கு மலைத் தொடரை யொட்டிய பிரதேசங்களிலும், அஸ்ஸாமிலும் வருஷ மழையின் அளவு சராசரி 100 அங்குலங்களுக்குமேல் நிற்கிறது. இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், தக்ஷிண பீடபூமிப் பிரதேசங்களில் வருஷ மழை சராசரி 5 அங்குலங்கள் தான். இந்த வேறுபாடுகள் நிலத்தையும் மக்களையும் பாதிக்கா வண்ணம் காப்பாற்றுவதற்கு நீர்ப்பாசன வசதிகளால்தான் முடியும்.

இந்த அதிகப்பட்ட மழைப் பிரதேசங்களிலுங்கூட வருஷ முழுவதும் ஒரேவிதமான அளவு மழை கிடையாது. ஜூன் மாத முதல் அக்டோபர் வரை தென்மேற்கிலிருந்து அடிக்கும் தென்மேற்குப் பருவக் காற்றுத்தான் (சாரல்) மிக உயர்ந்த மழையைக் கொடுக்கிறது. அந்தப் பருவக் காற்று மறுபடியும் திரும்பிச் செல்லும் பொழுது, வடகிழக்கு மழையாக, தேசத்தின் தெற்குக்கோடியில் மட்டும் நவம்பர் டிஸம்பர் மாதங்களில் மழையைக்

கொடுக்கிறது. இந்த மழையின் வளமையைக் காப்பாற்றி, வருட முழுவதும் நிலத்துக்குப் பயன்படச் செய்ய நீர்ப் பாசன வசதிகளால்தான் முடியும். 'மழைக் காலத்தில் கடலுக்கு ஏராளமாகத் தண்ணீர்; வெயில் காலத்தில் எங்கும் மணல்' என்ற நிலைமை மாறவேண்டும். அதை நீர்த்தேக்கங்களினால்தான் செய்யமுடியும்.

நம் நாட்டில் தரிசாகக் கிடக்கும் லக்ஷக் கணக்கான ஏக்கரா நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர உதவக் கூடியதும் இந்த நீர்ப்பாசன வசதிகளே. பெருநதிகளின் பெருவெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்கும் பெரிய பெரிய நீர்த்தேக்கங்களால்தான் முடியும்.

இந்தியாவின் நீர்ப்பாசனம், கால்வாய்கள் மூல மாகவும் குளங்கள் மூலமாகவும், கிணறுகள் மூலமாகவும் நடந்து வருகிறது. சில சில இடங்களில், ஆற்றிலிருந்து எடுப்புத் தண்ணீர் மூலமாகவும் ஆற்றின் வெள்ளத் தண்ணீரைத் தடுத்து வைத்துக் குட்டைகள் மூலமாகவும், நீர்ப்பாசனம் நடக்கிறது. கால் பாசனம் என்பது நதிகளிலிருந்து வரும் கால்கள் மூலம் நிலம் பண் படுத்தப்படும் பாசனமாயிருக்கலாம்; அல்லது நீர்த்தேக் கங்களிலிருந்து வரும் நீர்ப்பாசனமாயிருக்கலாம். சில ஆறுகளிலிருந்து சதா காலங்களிலும், கால்களில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும். சில கால்களுக்கு, ஆறு களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தண்ணீர் வரும் பொழுதுதான், தண்ணீர் வரும். இதைத் தவிர பம்புக் கிணறுகளும் உண்டு. மின்ஸார வசதி மிகவும் அதிகமிருந் தால்தான் இத்தகைய கிணறுகள் பாசனத்திற்குப் பிரயோஜனமாயிருக்கும்.

முதல் இந்திய தேசிய ஐந்து வருஷத் திட்டத்தில் விவசாயத்திற்கும், நீர்ப்பாசனத்திற்கும், ஜலமின்ஸாரத்

திற்கும் உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டிருப்பது மெச்சத் தக்க விஷயம்.

திட்டத்தின் கோரிக்கை பின்வருமாறு:

| வருஷம் | செலவு (கோடி ரூபாய்) | நீர்ப்பாசனம் கிடைக்கும் நிலம் (ஏக்கர்) | மின்சாரம் (கிலோவாட்.) |
|---|---|---|---|
| 1951—2 | 85 | 6,46,000 | 58,000 |
| 1952—3 | 121 | 18,90,000 | 2,39,000 |
| 1953—4 | 127 | 35,55,000 | 7,24,000 |
| 1954—5 | 107 | 57,49,000 | 8,75,000 |
| 1955—6 | 78 | 85,33,000 | 10,82,000 |
| ஆகமொத்தம் | 518 | 2,03,73,000 | 29,78,000 |

இந்த ஐந்து வருஷத் திட்டத்தின் பிரகாரம், நமது நாட்டில் இன்று வேலை செய்யப்படுவது 102 பெரிய வேலைத் திட்டங்கள். அவற்றுள் மிக முக்கியமான சில திட்டங்களைப் பற்றிய குறிப்புகளைக் கீழே காணலாம்.

இந்தியாவில் காணக்கிடக்கும் உலோகப் பொருள்களில் பெரும்பான்மை பின்னிக்கிடப்பது தாமோதர் நதிப் பள்ளத்தாக்கிலாகும். அத்தகைய இடத்தில் ஜல மின்ஸாரம் ஏகமாகக் கிடைக்கும் பக்ஷத்தில் அது ஒரு முக்கிய தொழிற்சாலைப் பள்ளத்தாக்காக விளங்க ஏதுவாயிருந்தது. அதற்கேற்ப அங்கு இத்திட்டம் அமைந்திருப்பது மிகவும் பெரிய காரியம். மேலும் இத்திட்டத்தினல், லக்ஷக்கணக்கான ஏக்கராக்கள் நிலம் சாகுபடிக்கு வரும் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். 8 அணைத்

திட்டங்களும், 400,000 கிலோவாட் மின்ஸார சக்தி உற்பத்தி பண்ணும் எட்டு மின்ஸார சாலைகளும், 110 தொழில் ஸ்தாபனங்களும், 90 மைல் அளவுக்கு போக்கு வரத்து வசதிகளும், இத்திட்டத்தினால் ஏற்படும் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் ஒதுக்கி வைத்திருப்பது 75 கோடி ரூபாய்கள். மேற்கு வங்காளம், பீஹார் மாகாணங்கள் இத்திட்டத்தினால் செழிப்புறும்.

**பக்ரா நங்கல் திட்டம்,** கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் ரூபர் என்ற ஊருக்கு 50 மைலுக்கு மேலே பக்ரா கிராமத்திற்கு பக்கம் ஸ்ட்லஜ் நதிக்குக் குறுக்கே 680 அடி உயரத்திற்குக் கட்டப்பட்ட திட்டம். பக்ரா-நங்கல் திட்ட அணைக்குப்பின் தேங்கி நிற்கும் நீர் நிலையின் நீளம் 50 மைல்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 3,000,000 ஏக்கரா நிலங்களுக்கு நீர்ப்பாசனமும், 3,000,000 கிலாவாட் மின்ஸார சக்தியும் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 1954 ஜுலை 8-ம் தேதி, பக்ரா-நங்கல் கால்வாய்களைப் பிரதமர் நேரு திறந்து வைத்தார். நங்கல் அணைக்கு 12 மைல் கீழேயுள்ள கங்குவால் ஜல மின்ஸாரச் சாலையை 1955 ஜனவரி 2ல் ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் திறந்து வைத்திருக்கிறார். இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் அனுமதித்திருப்பது 133 கோடி ரூபாய். ஒவ்வொரு சமயம் இந்தத் திட்டத்திற்காக வேலை செய்ததாகச் சொல்லப்படும் மக்களின் எண்ணிக்கை 1,50,000.

**மாயூராக்ஷி திட்டம்,** அநேகமாக இப்பொழுதே அமுலுக்கு வந்துவிட்டது. 120 மைல்கள் தூரம் கட்டப்பட்டிருக்கும் கால்வாய் வசதிகள், 80,000 ஏக்கரா நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கொடுக்கிறது.

**ஹீராகுட் திட்டம்,** ஒரிஸா மாகாணத்தில் மகாநதிக்குக் குறுக்கே அணை கட்டி ஸம்பல்பூர் ஜில்லா முழுவதும் நீர்ப்

பாசன வசதிகளை ஏற்படுத்தியிருப்பது இத்திட்டம். இரண்டு மின்சார சாலைகளும் இத்திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்படும் மகாநதியால் வெள்ளச் சேதங்கள் ஏற்படாமல் இவ்வணைக்கட்டு இங்குள்ள பூமியைக் காப்பாற்றும். இந்தத் திட்டத்திற்காக அரசாங்கத்தின் செலவு 55 கோடி ரூபாய்.

**அஸ்ஸாம் நீர்ப்பாசன வசதித் திட்டம்,** பிரமபுத்திரா நதியின் நீர்ப்பெருக்கால் அஸ்ஸாம் நாட்டிற்குச் சேதம் விளையாமல் இருக்க, தளவரிசைகளும், அணைகளும், தேக்கங்களும் ஆங்காங்கு கட்டப்பட்டுப் பயன்படும்படி அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது.

**கோஸிநதித் திட்டம்,** பீஹார் மாகாணத்தில் கோஸி நதியின் குறுக்கே கட்டப்படும் இத்திட்டம், 25 லக்ஷம் ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கும், கோஸிநதியின் வெள்ளப் பெருக்கால் ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கும், 40,000 கிலோவாட் ஜல மின்ஸார சக்தி உற்பத்தியாகும்படிக்கும், 6 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படுகிறது.

**கங்காபூர் நதித் திட்டம்,** நாசிக் ஜில்லாவில் (பம்பாய்) கோதாவரி நதியின் குறுக்கே அணைகட்டும் திட்டம். 4[illegible],000 ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கு இத் திட்டம் பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட செலவு தொகை $3\frac{1}{2}$ கோடி ரூபாய்.

**கத்தப்பிரபாத் திட்டம்,** பம்பாய் மாகாணத்தில், இத் திட்டத்தின் பிரகாரம், கத்தப் பிரபாநதி, இன்னும் 10,000 ஏக்கரா நிலங்களுக்கு பீஜபூர், பெல்காம் ஜில்லாக்களில் பயன்படும். செலவு $5\frac{1}{2}$ கோடி ரூபாய்.

**கக்ரபாரா அணைத் திட்டம்.** பம்பாய் மாகாணத்தில் தப்தி நதியின் குறுக்கே கட்டப்படும் இத்திட்டம் முக்கியமானது. 6,52,000 ஏக்கரா நிலங்கள் இத்திட்டத்தினால்

சாகுபடிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செலவு ரூபாய் $12\frac{1}{2}$ கோடி ஆகலாம் என்று மதிப்பிடுகிறார்கள்.

**மாஹி நதித் திட்டம்.** பம்பாய் மாகாணத்தில் கைரா ஜில்லாவில் 90,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கு வரும்படி, இந்தத் திட்டம் நடத்தப்படுகிறது. செலவு ரூபாய் $4\frac{1}{2}$ கோடி.

**கோதாவரி முதல் அணைத் திட்டம்.** ஹைதராபாத்தில் அடிலாபாட் ஜில்லாவில் பயன்படும்படி 53,000 ஏக்கராக்கள் விளை நிலமாவதன் பொருட்டு இந்தத் திட்டம் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்படுகிறது.

**ரஜோலிபுந்தா திட்டம்.** ரெய்ச்சூர் சமவெளியில் 79,000 ஏக்கரா நிலங்களை வளப்படுத்தும். ரூபாய் $4\frac{1}{2}$ கோடி செலவு எதிர்பார்க்கப்படுகிறது.

**சாம்பல் நதித் திட்டம்,** 34 கோடி ரூபாய் செலவில், 12 லட்சம் ஏக்கரா நிலங்கள் சாகுபடியின் பொருட்டு, மத்திய மாகாணமும், ராஜஸ்தானும் செழிக்கும் பொருட்டும் நடந்துவரும் திட்டம். இந்தத் திட்டத்தினால் 80,000 கிலோவாட் மின்சார சக்தியும் நாட்டிற்குக் கிடைக்கும்.

**பவானி நதித் திட்டம்.** ரூபாய் $9\frac{1}{2}$ கோடி செலவில் 2,07,000 ஏக்கரா நிலங்கள் என்றும் சாகுபடிக்கு வரும்படி அமைக்கப்படுகிறது பவானி நதித் திட்டம். மதராஸ் மாகாணத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவைச் சார்ந்தது இந்தத் திட்டம்.

**மல்லம்புளாத் திட்டம்,** மலையாள ஜில்லாவில் 40,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கு வர இந்தத் திட்டம் பயன் பெறும். திட்டத்தின் செலவு $3\frac{1}{2}$ கோடி என மதிப்பிடப் படுகிறது.

**துங்கபத்திராத் திட்டம்.** தேசீய ஐந்து வருஷத் திட்டங்களில் முக்கியமானதில் இதுவும் ஒன்று. 43 கோடி

ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிர்மாணமாகி வருகிறது. மதரூஸ், ஆந்திரா, ஹைதராபாத் மாகாணங்களுக்கு மிகவும் பயன்படும் வண்ணம் இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. 7,00,000 ஏக்கரா நிலங்கள், இந்தத் திட்டத்தினுல் செழிப்படையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மணிமுத்தாறு நதித் திட்டம்.** திருநெல்வேலி ஜில்லா (மதராஸ் மாகாணம்) விலுள்ளது இந்தத் திட்டம். 4 கோடி ரூபாய் எதிர்பார்ப்பில் பிரம்மாண்டமான முறையில் கட்டப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினுல், 20,000 ஏக்கரா நிலங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பயிருக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாமிரவருணியினது முக்கியமான உப நதிகளில் ஒன்று மணிமுத்தாறு. அம்பாசமுத்திரத்திலிருந்து சில மைல்கள் தென் மேற்கில் கல்லிடைக்குறிச்சியிலிருந்து நான்கு மைல்களில் இந்த அணை கட்டப்பட்டு நீர்த் தேக்கம் அமைக்கப்படுகிறது. அணையின் நீளம் $2\frac{1}{2}$ மைல்கள். 60 சதுர மைல் விஸ்தீரணத்திலிருந்து மழை ஜலம் இந்தத் தேக்கத்தில் பெருகும். தாமிரவருணியின் தற்போதுள்ள விளைநிலங்களான 83,000 ஏக்கர் நிலங்களுக்கு நீர் வசதி அளிப்பதுடன், இந்த நீர்த்தேக்கம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், நாங்குநேரி, திருச்செந்தூர், இவ்வைந்து தாலுகாக்களிலுள்ள குளங்களைப் பெருக்கி சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியைப் புதிதாக ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கிறுர்கள். இந்த நீர்த் தேக்கத்திலிருந்து நிர்மாணிக்கப்படும் 29 மைல் நீளமுள்ள கால் ஒன்று, வெவ்வேறு கிளைக் கால்களின் வழியாக இந்த ஐந்து தாலுகாக்களிலுள்ள 321 குளங்களுக்குத் தண்ணீர் கொண்டுபோய்ச் சேர்க்கும். அம்பாசமுத்திரம் தாலுகாவில் 75 குளங்கள், திருநெல்வேலி தாலுகாவில் 32 குளங்கள், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் 18 குளங்

கள், நான்கு நேரி தாலுகாவில் 122 குளங்கள், திருச்செந்தூர்த் தாலுகாவில் 74 குளங்கள், இந்தப் புதுக்கால்வாய்களால் பயன்பெறும். இதன் மூலம், திருநெல்வேலி ஜில்லாவில் தானிய உற்பத்தியில் சுமார் 60 லட்ச ரூபாய் மதிப்புள்ள 20,000 டன் அரிசியை அதிகரிக்கச் செய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பத்ராநதித் திட்டம்.** ரூபாய் 20 கோடியில் நிர்மாணமாகி வருவது இந்தத் திட்டம். மைசூர் சமஸ்தானத்தைச் சார்ந்த லக்கவள்ளி என்னுமிடத்தில், சிமோகா, சித்தல்துர்க் ஜில்லாக்கள் இதனால் செழிப்படையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1,80,000 ஏக்கரா நிலங்களின் விமோசனம் இதைப் பொறுத்து நிற்கிறது.

**துங்காநதித் திட்டம்.** மைசூர் பிரதேசத்தில் சிமோகா, கரூர் ஜில்லாக்களைச் செழிக்க வைக்கும் திட்டம் 21,000 ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமைப்புச் செலவு ரூபாய் 2 கோடி.

**ஜவாய் நதித் திட்டம்.** ராஜஸ்தான் வறண்ட நிலங்களை வளமாக்கும் வண்ணம் அமைக்கப்படும் திட்டம். 5000 ஏக்கர் நிலங்கள் பயிருக்கு வர இந்தத் திட்டம் உதவும். செலவு ரூபாய் 3 கோடி.

**பேச்சிப்பாறை அணைக்கட்டு.** திருச்சூர் ஜில்லாவிலுள்ள இந்தத் திட்டத்தில் 50,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செலவு ரூபாய் $1\frac{1}{2}$ கோடி.

**சாலக்குடி அணைக்கட்டு.** இதுவும் திருவாங்கூர்-கொச்சின் சமஸ்தானத்தைச் சார்ந்த திருச்சூர் ஜில்லாவில் 50,000 ஏக்கரா நிலங்களுக்குப் பயன்படும் வண்ணம் அமைந்திருக்கிறது. நிர்மாணச் செலவு ரூபாய் $1\frac{1}{4}$ கோடி.

இவை முதல் தேசீய ஐந்து வருஷத் திட்டத்தின்படி நிர்மாணமாகி வரும் சில உயர்ந்த அணைக்கட்டுத் திட்டங்

கள். ராமபாத சாகர் (129 கோடி ரூபாய்). கிருஷ்ணு பெண்ணுறு திட்டங்கள் (120 கோடி ரூபாய்). வேறு சில முக்கிய திட்டங்களுமுண்டு. பக்ரா-நங்கல், ஹிராகுட், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்கள் உலகத்திலுள்ள திட்டங்களிலேயே முதன்மையாக நிற்கக் கூடியவை என்று சொல்லலாம்.

நீர்ப்பாசனத் திட்டங்கள், நமக்கு இத்தகையவாறு இருந்தாலும் இன்னும் கட்டப்பட வேண்டிய திட்டங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நமது நாட்டின் நிலவளத்தை உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டுமானுல் நாம் நம் நீர் வளத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்வரையில் நாம் இந்தத் துறையில் மிகவும் பின்னடைந்து நின்றிருந்திருக்கிறோம். அது உலக நீர்ப்பாசன வசதி ஜாபிதாவைப் பார்த்தால் நன்கு தெரியும்.

| தேசம் | எடுக்கக்கூடிய ஹார்ஸ்பவர் வசதிகள் (பத்து லட்ச அளவில்) | எடுத்திருப்பது | சத வீதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா (U. S.) | 35·0 | 11·7 | 33 |
| கனடா | 18·2 | 4·5 | 25 |
| பிரான்ஸ் | 5·4 | 2·1 | 37 |
| ஜப்பான் | 4·5 | 1·7 | 37 |
| இத்தாலி | 3·8 | 1·8 | 47 |
| சுவிட்சர்லாந்து | 2·5 | 1·8 | 72 |
| இந்தியா | 27·0 | 0·8 | 3 |

இது 1932-ம் வருடம் எடுத்த திட்டத்தின் பிரகாரம் குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னுல் 1950 வரை

நாம் 6 சதவீதம் வரைக்குத்தான் நீர்ப்பாசன வசதிகளைப் பிரயோசனப்படுத்திக் கொண்டிருந்திருக்கிறோம். 5 வருஷத் திட்டங்களெல்லாம் பூர்த்திக்கு வரும்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீர்ப்பாசன வசதிக்கு ஒத்து நம் நாடும் வந்து சேரும் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசனம்தான் இந்திய விவசாயத்திற்கு ஆதாரம். விவசாயம், நமது நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளம். பயிர் விளைச்சலை நம்பி நாட்டின் செழிப்பு நிற்கிறது. பஞ்சம், பசி, பிணி நாட்டிலிருந்து செல்லவேண்டுமானல் அன்று தமிழ்க்கவி சொன்னதை யாவரும் கடைப்பிடித்தாக வேண்டும்: "வாரி இடம் சேராதவையையே, பாரில் வலத்தும் இடத்தும் இருபுறத்தும் சென்று நடத்தும் தமிழ்ப் பாண்டி நாடு", **எங்கும் நீர்ப்பாசனம்.** அது ஒரு வழிதான் நாடு வறுமையிலிருந்து உய்வதற்கு இருக்கிறது. மக்களுக்கு உணவுப்பொருள், மக்களுக்கு வாழ்க்கை முறை, மக்களுக்கு வேலைகள், பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு வேலை, நாட்டுக்கு வளம்—இவையல்லவா நீர்ப்பாசனம் சாதிக்கும் காரியங்களாயிருக்கின்றன.

பெரிய பெரிய திட்டங்கள், ருஷிய சர்க்கார் வகுத்துச் செய்திருப்பது போலவும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் செய்திருப்பது போலவும் நம்நாட்டில் நதிவளத்தைப் பெருக்க நாம் செய்யவேண்டும். ஒவ்வொரு நதிக்கும் ஒரு தனித்தனிக் கமிட்டி, சிறந்த ஆராய்ச்சியாளரைக் கொண்டு ஏற்படுத்த வேண்டும். அந்த அந்த நதியின் தண்ணீர் முழுவதும் கொஞ்சம்கூட வீணுகாதவாறு எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்என்பது அந்த அந்தக்கமிட்டியாரின் கவனிப்பாக இருக்கவேண்டும். உயர்ந்த நீர்ப்பாசன இலாகா ஆராய்ச்சி சாலைகள் அங்கங்கு ஏற்படுத்தப்படல் வேண்டும். ருஷிய நாட்டிலும், அமெரிக்க நாட்டிலும், அவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் உயர்ந்த விஞ்ஞான முறைகளை, நம் நாட்டி

னரும் பயன்படுத்திக்கொள்ளும்படி, இந்த ஆராய்ச்சிசாலை கள் உதவி தரவேண்டும். பொதுமக்களுக்கு இந்த நீர்ப் பாசனத் திட்டங்களைப்பற்றிய படங்களையும், நில அபி விருத்தியைப்பற்றிய செய்திகளையும் அவ்வப்போது, காட்சி சாலைகள் மூலமாகவும் சினிமாப்படங்கள் மூலமாகவும் (educaticcnal films), விளம்பரங்கள் மூலமாகவும், செய் தித்தாள்கள் மூலமாகவும் தெரிவித்து வரவேண்டும். பொதுமக்கள் ஆதரவு அவர்களுக்காகவே செய்யப்படும் இத்தகைய முயற்சிக்கு, பாலைவனத்தைச் சோலைவனமாக் கும் இந்த முயற்சிக்கு, ஏராளமாக வேண்டும். கட்டாயக் கடன்கள், நன்கொடைகள், அதி உயர்ந்த வருமானங் களின் மேல் உயர்ந்து செல்லும் வரிகள், அந்நிய நாடு களின் உதவிகள், ஐக்கிய சபையின் உதவிகள், முதலியன இந்தத் திட்டங்களுக்கு வேண்டிய பண வசதியை ஒருவாறு கொடுக்கும். "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில், ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியுடன், அர சாங்கமும் சேர்ந்து கும்மாளம் தட்டுகிறது என்று தெரிந் தால் யாரும் விலகி நிற்கமாட்டார்கள். அது மக்கள் யாவ ருடைய கடமையுமாகும். பெரிய பெரிய நதிகளின் அடித் தளங்களைத் தகுந்தவாறு மாற்றி அமைத்தால் நாட்டின் வறுமை நிலை கண்டிப்பாக மாறிவிடும். அது ஒரு பெரிய முயற்சி. ஆனால் அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டு, கோபால்ட் குண்டு செய்யும் இந்தக் காலத்து விஞ்ஞானி களுக்கு அது ஒரு பெரிய காரியமாக இருக்க முடியாது. எங்கேயோ மலைமுகடுகளில் ஓடிக்கொண்டிருந்த கங்கை யைத் திருப்பி, சமவெளிப் பிரதேசத்திற்குக் கொண்டு வந்தவர்கள் நம் நாட்டவர்கள் என்று நமக்குப் பழைய கதைகள் எடுத்துக் காட்டுகின்றன. அத்தகைய நாட்டி லுள்ள நமக்கு கங்கையையும், காவிரியையும் சேர்ப்பதோ, அல்லது இந்நதிகளின் நீரால் பாரதத்தை முழுவதும் நனைப்பதோ முடியாத காரியமாக இருக்க முடியாது.

உழவுத்தொழில் மிகவும் பூர்வமான தொழில்; ஆயிரக் கணக்கான வருடங்கள், மனிதன் முயற்சிக்குப்பின், வழி வந்த தொழில்; மனித வாழ்க்கைக்கே அடிப்படையாய் விளங்குவது. இத்தகைய தொழிலை வளப்படுத்த, நீர்ப் பாசனத் திட்டங்கள் ஆயிரம் ஆயிரமாக வகுக்கவேண்டும்; வகுத்து, திட்டங்களின் பெரும் சேமிப்பு, உழவு பிடிக்கும் கைகளுக்கு ஏராளமாகப் போய்ச் சேரும்படி ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நாட்டில் நலங்கள் பெருகும்.

சென்னை மாகாணத்தில் சேலம் ஜில்லாவில் மேட்டூர் அணை, 'தண்ணீரும் காவிரியே' என்று புகழப்படும் காவிரி நதியின் பள்ளத்தாக்கில் சுமார் அறுபது சதுரமைல்களுக்கு ஜலத்தைத் தேக்குகிறது. அணைக்கட்டின் நீளம் சுமார் ஒரு மைல்; சுமார் 220 அடி உயரத்திற்குக் கான்கிரீட், சிமென்டால் கட்டப்பட்டிருக்கிறது. 1934-ம் வருடத்தில் கட்டப்பட்டது. அப்பொழுது செலவு சுமார் 7 கோடி ரூபாய். பட்டுக்கோட்டை, மன்னார்குடி, அறந்தாங்கி ஆகிய தாலுகாக்களைச் செழிப்பாக்குகிறது.

கம்பப் பள்ளத்தாக்கிலிருந்து வரும் பெரியாறு, மதுரை திருவாங்கூர் எல்லையில் பள்ளத்தாக்குகளினூடேயே சென்று, இறுதியில் கொச்சியில் இறங்கிக் கடலில் கலக்கிறது. இந்நதியின் தண்ணீரைப் பாசனத்திற்கு உபயோகப்படுத்தும் வண்ணம், சென்னை சர்க்கார் 3000 அடி உயரத்தில் ஒரு ஏரி கட்டி, தண்ணீரை மதுரை ஜில்லாவுக்குத் திருப்ப வழி செய்தனர். நிலக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், பழனி, திருமங்கலம், மேலூர் தாலுகாக்கள், இந்தத் தேக்கத்தினால் செழிப்பாகின்றன. கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ லக்ஷம் ஏக்கர் இதனால் பாசன வசதி பெறுகிறது.

அமராவதி நீர்த் தேக்கத் திட்டமும், வைகை நதி நீர்த் தேக்கத் திட்டமும், துரைத்தனத்தாரால் புதிதாக அங்கீ

கரிக்கப்பட்டிருக்கின்றன. 15000-20000, ஏக்கரா நிலங்கள் இவற்றால் சாகுபடிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் செலவு முறையே 3 கோடி, 2½ கோடி ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வடஆற்காடு ஜில்லாவில் சாத்தூர்த் திட்டத்தையும், சேலம் ஜில்லாவில் கிருஷ்ணகிரித் திட்டத்தையும், துரைத்தனத்தார் அங்கீகரித்திருக்கின்றனர். இந்தத் திட்டங்களெல்லாம் தேசிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும்.

அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் 1953-ம் வருடம் டிசம்பர் மாதம் 10-ம் தேதி மாஜி கவர்னர் ஜெனரல், ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இத்திட்டப்படி மலையின் அடிவாரத்தில், கொம்புக் காட்டு பங்களாவிற்குக் கீழே அரை மைல் தூரத்தில் நதியின் குறுக்கே ஒரு அணை 150 அடி உயரத்தில்கட்டி நீர்த்தேக்கம் அமைக்கப்படும். இத்திட்டத்தினால் வரட்சிக் காலத்தில் ஏற்கனவேயுள்ள 32 ஆயிரம் ஏக்கரா ஆயக்கட்டுக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாகவும் 15,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கு வரலாம் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

**வைகை நீர்த்தேக்கத் திட்டம்**

தென் இந்தியாவின் ஆதென்ஸ் மாநகரம் என்று கௌரவிக்கப்படும் மதுரை நகரும், அந்த ஜில்லாவும், இராமநாதபுரம் ஜில்லாவும் இந்தத் திட்டத்தினால் நன்கு செழிப்படையும்.

பொன்னியாற்றின் குறுக்கே கட்டும் திட்டங்கள் தான், சாத்தனூர்த் திட்டமும், (வடஆற்காடு ஜில்லாவில்) கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டமும் (சேலம்

ஜில்லாவில்) முறையே 20,000 ஏக்கராக்கள், 7500 ஏக்கராக்கள் நிலம் இத்திட்டத்தினால் செழிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்து வருஷத் திட்டத்தின் பேரிலும், அமெரிக்கா தேசத்தின் உதவியைக்கொண்டும் ஏராளமான பம்புக் கிணறுகள் பாசனத்தின் பொருட்டுத் துரைத்தனத்தார் நூற்றுக்கணக்கில் ஏற்படுத்தி வருகின்றனர். முக்கியமாக உத்தரப்பிரதேசம், பீஹார், பஞ்சாப், பெப்ஸு மாகாணங்களில் சொற்பக் கூலியில் மின்ஸார வசதிகள் இந்த விதக் கிணறுகளுக்குக் கிடைக்குமானால், பாசன வசதிக்கு இவை மிகவும் அனுகூலமாயிருக்கும்.

இத்தகைய அழகிய திட்டங்களிலும் நீர்த்தேக்கங்களிலுந்தான் நமது தேசத்தின் எதிர்காலம் நிற்கிறது. இயற்கையின் ஜலவசதியில் 5·6% வீதம்தான் உபயோகப்படுத்திக்கொண்டு வந்த நமது தேசம் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முழுவதும் பலனுக்கு வரும்பொழுது 13·6% வீதம் வரை நதிவளத்தை உபயோகப்படுத்திக் கொண்டதாகும். ஜலவசதியை இன்னும் மேற்கொண்டு, மிக எளிதாக, அணைகள் மூலமாகவும் நீர்த்தேக்கங்கள் மூலமாகவும் இரட்டிப்புப் பங்கு 27% உபயோகத்திற்குக் கொண்டு வரலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள். உணவுப் பயிருக்கும், வியாபார வகைக்கான பயிர் வகைகளுக்கும் வெள்ளச் சேதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும் ஜலமின்சாரத்தின் பொருட்டும் இத்திட்டங்கள் பயன்படும். மேலும் இவை போக்கு வரவு வசதிக்கும், காடுகள் வளர்ப்பதற்கும், ஏராளமான நிலப்பிரதேசம் செழிப்பதற்கும், புற்றரைகள் வளர்ப்பதற்கும், மீன் வகைகள் வளர்ச்சிசாலைகளுக்கும், நல்ல சுகாதாரக் குடி தண்ணீர் வசதிக்கும், பெரிய பூங்காக்கள், சாலைகள், தோட்டங்கள் உற்பத்திக்கும் மிகவும் பிரயோஜனப்படும்.

# 6

## நாட்டின் கால்நடை வளம்

சமீப காலத்தில் ஒரு அமெரிக்க ஆசிரியன், தான் உலகெங்கும் சுற்றும்பொழுது இந்திய நாட்டைப் போன்ற சிறந்த பழமையான பண்பாட்டையுடைய நாட்டைப் பார்க்கவில்லை என்றும், ஆனால் அந்நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு பெருத்த குறையிருக்கிறது என்றும் எழுதினான். இந்திய நாட்டை அதன் ஆடு மாடுகள் தின்று கொண்டிருக்கின்றன என்பது அவனுடைய கூற்று. மிகவும் உண்மையான விஷயம் அது.

நமது நாட்டில், ஆடு, மாடுகள், பன்றிகள் உள்பட கால்நடையின் எண்ணிக்கை சுமார் முன்னூறு கோடி. உலகத்திலுள்ள நாடுகளில், கால்நடைகள் எண்ணிக்கையில் பெருத்தது நம் தேசமே என்று சொல்லலாம். அந்த எண்ணிக்கையே ஒரு பலத்தைக் கொடுப்பதுபோல் அமைந்திருப்பது ஒரு சிறப்பான காரியம்.

தொன்று தொட்டு வருவது இந்திய விவசாயம். அந்தப் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக அதனது அடித்தளமாக இருந்திருப்பது அதன் கால்நடைகள். உழவு கோலும் மாடும்தான் நமது நாட்டைத் தலைமுறை தலைமுறையாக ஒரு பெரிய தானியக் களஞ்சியமாக ஆக்கி வந்திருக்கின்றன. வாகனத்துக்கோ, எரு அடிப்பதற்கோ, உழுவதற்கோ, தானியத்தைக் கொண்டு சேர்ப்பதற்கோ, வைக்கோலை அப்புறப் படுத்துவதற்கோ, அவனுக்குத் துணை வந்திருப்பது அவனது காளை மாடு. அவனுக்கும், குழந்தைகளுக்கும்,

சிறந்தபொருளை—பாலை—உணவாகக் கொடுத்து வந்திருப்பது பசு. அவன் குடிசைக்கே ஒரு தனி அழகையும் சாந்தத்தையும் கொடுப்பதும், வயலில் வேலையில்லாத காலங்களிலும் அவனுக்குப் பொருள் சம்பாதித்துக் கொடுப்பதும் அந்தப் பசுதான். வீட்டில் குழந்தைகளை ஒப்ப வளர்ந்து வரும் அந்தப் பசுவின் எண்ணிக்கை அதிகமாயிருத்தல் பற்றித் தவறு ஒன்றுமில்லை.

ஆனால், எண்ணிக்கை அதிகமாயிருந்தும், விவசாயியின் வாழ்க்கையே பாதிக்கக்கூடிய அளவில், மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றன நமது கால்நடைகள். எண்ணிக்கை பலத்தைக் கொடுப்பதற்குப் பதிலாகப் பாரத்தைக் கொடுக்கும் வண்ணம் அமைந்திருப்பது நாட்டின் துரதிர்ஷ்டமே.

மேய்வதற்குச் சரியான புல் தரைகள் ஊர்தோறும் இல்லாத நிலையில், விவசாயியின் பொருளாதாரம் பாதிக்கும் நிலையில் அவன் கால்நடைகள் நிற்கின்றன.

இந்திய விவசாயியினது வறுமை அவன் கால் நடைகளையும் வழக்கமாகப் பாதிக்கிறது. சரியான போஷணையோ அல்லது பராமரிப்போ அவனிடமிருந்து சாதாரணமாக எதிர் பார்க்க முடியாது.

கால்நடைகளை, அதன் ஆரோக்கியத்தில் பழுது ஏற்பட்டால், உடனே தகுந்த மருத்துவ வசதிகள் கொடுக்கும்படி செய்வது, நமது நாட்டில் சாதாரணமாகப் போதுமானபடி வழக்கத்தில் இல்லை. கால்நடைகள் ஆஸ்பத்திரியும் குறைவு. இருக்கிற ஆஸ்பத்திரி வசதிகளும் சரியானபடி உபயோகத்துக்கு வராத நிலைமை. ஆகவே, கால்நடைகளின் நோய் பெருவாரியாகப் பரவுதலும், மடிதலும், ஆரோக்கியமிழந்து 'விருதா' மாடுகள் என்று சொல்லப்பட்டு நூற்றுக்கணக்கில் சஞ்சரிப்பதும், நாட்டுக்குப் பிற்போக்கைக் கொடுக்கும் வண்ணம் இருக்கிறது. ஆரோக்

கியமிழந்த மாடுகள், அதிக வேலை செய்யவோ அல்லது பால் கொடுக்கவோ முடியாது; ஆனால் அதன் ஆரோக்கியக் குறைவு காரணமாக அதன் தீனி இரட்டிப்புக்கு அதிகமா கிறது. இது ஆரோக்கியமுள்ள பசுவைப் பாதிக்கும் வண்ணமும் இருக்கிறது. இம்மாதிரியான பசுக்களைக் காட்டிற்கு ஓட்டி விடுவதோ அல்லது அந்நிய நாடுகளில் செய்வதுபோல் பெரிய இறைச்சி சாலைகளுக்கு அனுப்பி விடுதோ இந்திய நாட்டில் நடைபெற்று வராத வழக்கமா யிருக்கிறது.

கால்நடைகள் சம்பந்தமான பலவகைப்பட்ட விஞ் ஞான ஆராய்ச்சி அநுபவங்களும், யோசனைகளும், நடை முறைக்கு உண்டான வழிகளும், அதுபற்றிய தகவல்களும் நடப்பில் இந்திய விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. அது ஒரு பெரும் குறை.

வறுமை காரணமாக, கால்நடைகளின் எண்ணிக்கை நாடு தாங்க முடியாத நிலைமையில் பாரமாகி விட்டது.

ஊர்தோறும் புற்றரைகள், ஊர்தோறும் கால் நடைச் சங்கங்கள், ஊர்தோறும் பாற் பண்ணைகள், துரைத்தனத்தார் முயற்சியில் இலவச பேப்பர்கள் மூலமும் சினிமா மூலமும் கால்நடை பராமரிப்பைப் பற்றியும் அபிவிருத்தி பற்றியும் தகவல்கள் வழங்கல், இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒரு கால்நடைப் பராமரிப்பு மாதிரி இடம், அங்கிருந்து கலவைகள் ஏற் படுத்தல், அங்கிருந்து வீடுகள்தோறும் ஊழியர்கள் சென்று கால்நடைகளைப் பார்வையிட்டு உதவி செய்தல், பத்துக் கிராமங்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி வீதம் கால் நடை இலவச ஆஸ்பத்திரிகள் ஆங்காங்கு ஏற்படுத்தல் இவை ஒருவகையாகக் கால்நடைகளின் செழிப்பையும் முன் னேற்றத்தையும் கொண்டு வரும்.

அநேக இடங்களில் மந்தை என்று சொல்லும் கிராமத்துப் புற்றரைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. வேறு காரியங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றன. இந்திய விவசாயத்திற்குக் கால்நடை அடித்தளமாயிருக்கும் அளவு கிராமத்துப் புல் தரை கிராமத்துப் பொருளாதாரத்திற்கு அடித்தளமாகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

# 7

## நாட்டின் மக்கள் வளம்

இந்தியர்கள் பழங்குடி மக்கள். பண்பாடு என்னும் சொல்லுக்கே காரணஸ்தர்கள் அவர்கள். மேற்கோள்களும் அவர்களே.

பூர்வமாக வந்த ஒரு பெரிய நாகரிகத்தின் பிரதிநிதிகள் அவர்கள். தங்கள் எலும்பையும் பிறர்க்கு உவந்து கொடுக்கும் மரபில் இயற்கையாகவே வளர்ந்தவர்கள். சிந்தனையையும் பண்பாட்டையும் தேக்கி உலகத்திற்குக் கொடுத்த அவர்களுக்கு என்ன செளகரியங்கள் இன்று இருக்கின்றன?

முதலாவதாக ஆரோக்கிய நிலைமை, மிகவும் வருந்தத் தக்க நிலைமையிலிருக்கிறது. ஆயிரக்கணக்கான தாய்மார்கள் பிரசவ காலத்தில் இன்றும் வருஷா வருஷம் மடிந்து போகின்றனர். அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டு ஆராய்ச்சிசாலைகள், உலகத்தையே ஒரு நொடியில் ஒரு கொலைக்களமாக மாற்றும் வல்லமை வாய்ந்த ஆராய்ச்சி சாலைகளிருக்கும் இந்தக் காலத்தில், தாய்மார்கள் வருடந்தோறும் ஆயிரக்கணக்கில் மருத்துவ வசதிக் குறைவால் இறந்து படுகின்றனர் என்பதை நினைப்பதற்கே கஷ்டமாயிருக்கின்றது. பணவசதிக் குறைவு, இலவச பிரசவ ஆஸ்பத்திரிகள் இன்மை, போஷிப்புக் குறைவு, கிராம 'ஆயா'வின் ஆதிக்கம், சிறுவயதிலே மணம், நாட்டு மருந்துகள் இவை ஆயிரக்கணக்கில் நமது தாய்மார்களை இடுகாட்டிற்கு அனுப்பிவிடுகின்றன. ஆரோக்கியக் குறைவு என்பது நமது நாட்டில் எதேச்சை

யாக நாம் எங்கும், ஒவ்வொரு இடத்திலும் பார்க்கும் காட்சி. குழந்தைகளுக்குப் பால் வசதி கிடையாது. தாய்க்குக் கஞ்சியும் கிடையாது. மருத்துவ விடுதிகளில் அவர்களுக்கு மாற்றுச் சேலைகளும் அநேகமாகக் கிடையாது என்று எழுதியிருக்கிறார்கள். தாய், குழந்தை இவர்களின் போஷிப்பு, பராமரிப்பு, நம் நாட்டில் மிகவும் கேவலமான நிலைமையிலிருப்பது மிகவும் வருந்தத் தக்க விஷயமே. உலகத்தில் வேறு எந்தப் பக்கத்திலும் இந்த மாதிரிக் கிடையாது.

இதைத் தவிர இந்தியாவில் காணக் கிடக்கும் விதவைகள் சுமார் 2 கோடிப் பேர். இதில் பாதிக்கும் மேம்பட்டவர்கள் இளம் பிராயத்தினர். சமூகம் அவர்களை வாழ்வதற்கு உரிமையற்றவர்கள் என்று சொல்லிவிட்டது. இந்த நிலைமை மாறவேண்டும். பெண்களுக்குச் சம உரிமைகள், சம வீதத்தில் சொத்து உரிமைகள், பெண்களுக்கும் மறு முறை விவாகங்கள் என்று எல்லாம் ஏற்பட வேண்டும். அவர்கள் புருஷர் தவறியது அவர்கள் குறையல்லவே? பின் ஏன் மறு முறை விவாகம் செய்து கொள்ளக்கூடாது? பெண்கள் நல்வாழ்வு வாழ்ந்தாலொழிய நாடு முன்னேற முடியாது. அவர்கள் தான் சிருஷ்டிகர்த்தாக்கள்; ஒரு புது இந்தியாவை நிர்மாணிக்க வல்ல சிற்பிகள். அவர்களை இந்தப் பிற்போக்கான நிலைமையில் வைத்திருக்கும் நாம் நாட்டிற்கு நல்லன யாது செய்யப் போகிறோம்?

வேலையில்லாப் பெரும் குறை நாட்டு மக்களை மிகவும் வாட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது. லட்சக்கணக்கான ஆட்களுக்கு வேலை இல்லாத நிலைமை. வேலை யிருந்தாலும் அரை குறையான நிலைமையில்தான். போதுமானபடியில் கிடையாது. அது குடும்ப வாழ்க்கைக்கு இடைஞ்சலாகவும் நாட்டின் சுக அபிவிருத்தியைப் பாதிக்கும் வண்ணமும் அமைந்திருக்கிறது. ‘வேலையில்லை, வேலை

யில்லை' என்று ஒவ்வொரு நாளும் அவன் கேட்கும் பொழுது, தான் நாட்டிற்குத் தேவையில்லையோ என்று மெதுவாக அவன் நினைக்க ஆரம்பிக்கிருன். அதனுல் வரும் கஷ்டங்கள் மிகப்பல. அவனுக்கும் குடும்பத்திற்கும் தன்னம்பிக்கை குறைகிறது; வாழ்வில் ஆர்வம் குறைகிறது. அவன் ஜீவனக் கஷ்டத்தைத் தவிர அவனுக்கு ஜீவ நஷ்டமும் ஏற்படுகிறது. நாடெங்கும் இலவச மருத்துவ விடுதிகள், இலவசப் பள்ளிக் கூடங்கள், பெரிய தொழிற்சாலைகள், துரைத்தனத்தாரால் ஒவ்வொரு காலத்திலும் அவனுக்குக் கண்காணிப்பு, இவை ஏற்படக் கூடுமானுல், அவையே அவனுக்குச் சிறந்த துணையாயிருக்கும்

# 8

## கிராமக் கைத் தொழில்கள்

ஹிமாசலம் போன்ற உயரத்திற்குத் தாவக்கூடிய இந்தியனது மனசின் பக்குவம் அவனது கைத்தொழிலிலும் காணக் கிடக்கிறது. பார்த்தால், பார்த்த கண்கள் எடுக்க முடியாத அளவுக்கு, அவ்வளவு அருமையான கலைப்பண்பு களோடு கூடிய அரும்பெரும் பொருள்களை இந்தியக்கிராம வாசி அவனது அன்ருட வாழ்க்கையில் செய்து முடிக் கிருன். தந்தச் சாமான்கள் செய்வதோ, சந்தனக் கட்டை யினுல் அற்புதம் அற்புதமான சாமான்கள் செய்வதோ, கருங்காலியிலிருந்து செய்யும் மேஜையோ, நாற்காலியோ, யானைக் கூட்டங்களோ, அல்லது புத்தக அலமாரியோ, வேறு ஒரு நாட்டிலும் காணக்கிடக்காத ஒரு புதிதான பொலிவுடனும், உணர்வுடனும் இருப்பது யாவரும் அறிந்ததே. அதே போலத்தான் உலோகங்களினுல் செய்யும் அவனது பல்வேறு பாத்திரங்களும், உருவங் களும், ஒரு தனிச் சிறப்பு உணர்ச்சியை உண்டு பண்ணும் வண்ணம் அமைந்து இருக்கின்றன. அவன் செய்யும் அந்த மண் பாத்திரங்களிலும் கூட அந்த உன்னதமான பண் பாட்டின் முத்திரையைப் பார்க்கலாம். வர்ண வேலை தொன்றுதொட்டு வந்திருக்கும் ஒரு அருமையான கைத் தொழில். சிறு சிறு சட்டிகளில் கிராமத் தொழிலாளி வர்ணங்களைத் தீட்டுகிருன். அந்த வர்ணங்கள் நமக்கு நம் நாட்டில் அங்கங்கே காணக்கூடிய அழகிய சிறு ஓடை களின் பாலங்களையும், பனைமரங்களின் ஒய்யாரத்தையும் வயல்களின் பசுமையையும் என்றென்றும் நினைப்பூட்டும். சந்தைகளிலும் கடைத் தெருக்களிலும் இந்த விதமான எல்லாச் சாமான்களும், தொழிலாளியாலோ அல்லது

அவனது நம்பிக்கைக்குரிய வேலைக்காரப் பையனாலோ விற்பனை செய்யக்கொண்டு வரப்படுகின்றன. இதைத் தவிர வேறு எத்தனை எத்தனையோ முக்கியத்துவம் வாய்ந்த அற்புதமான தொழில்கள் கிராம வாழ்க்கையில் காணக்கிடக்கின்றன. இந்தியப் பொருளாதாரத்தையும் வாழ்க்கை முறையையுமே பிணைத்து நிற்கும் அந்த ராட்டை, கதர், நாட்டின் அடித்தளமாய் நிற்கும் நெசவு, நெசவிலிருந்து வந்த பல்வேறு வேலைகள், ஜரிகைக் கரை வேஷ்டிகள், ஜரிகைக் குல்லாக்கள், நம்பர் 104, 88, 44 வேஷ்டிகள், மயில் பார்டர் சேலைகள், அருவிக்கரைத் துண்டுகள் (நமது நாட்டு 'டர்க்கி டவல்கள்'), இன்னும் எத்தனை எத்தனையோ!

பல்வேறு வகைப்பட்ட தைல வகைகளும், பன்னீர் வகைகளும், புனுகு, அரகசா, சந்தனம் போன்ற வாசனைத் திரவியங்களும், இந்தியக் கிராமக் கைத்தொழில் கொடுக்கும் பல்வேறு பொருள்களாயமைகின்றன.

இவற்றைத் தவிர பாய்களும், பெட்டிகளும், கூடைகளும், பட்டோ என்று அதிசயிக்குமளவில் ஓலைகளிலிருந்தும், நார்களிலிருந்தும் செய்யப்பட்டிருப்பது நமது தேசத்திற்கே உரிய தனிப்பெருமையாயிருக்கிறது. பின்னல் நாற்காலிகளும், மேஜைகளும் ஆங்காங்கே செய்யப்படுகின்றன. அருமையான தேன் புட்டிகளும், எஸென்ஸ் வகைகளும், ஊறுகாய்களும், வற்றல்களும் ஒவ்வொரு கிராமாந்தரத்திலும் செய்யப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்படும். முட்டைகளும், பசுங்கீரையும், கத்தரிக்காயும் ஒவ்வொரு வீட்டிலும் உற்பத்தி செய்யப்படுவதை நாம் பார்க்கலாம்.

பலவகைப்பட்ட பந்திப் பாய்களும், ஜமக்காளங்களும் (சாதாரண ஜமக்காளங்கள் முதல் ரத்தின ஜமக்காளங்கள் வரை) நார்க்குடைகளும் கிராமங்களிலே செய்வ

துண்டு. இவ்வளவு பொருள்களும், தொழில்களும், இந்திய தேசத்தின் பிரதான பயிர்களான நெற்பயிரையோ அல்லது கோதுமைப் பயிரையோ சுற்றித்தான் வளர்கின்றன.

இந்திய தேசத்தில், மற்றைய நாடுகளைப்போல விவசாயப் பயிர் வேறு, கைத்தொழில் வேறு என்று பிரிக்க முடியாது. பயிர் வேறு, வாழ்க்கை முறை வேறு என்றும் பிரிக்க முடியாது. பயிர் முகம் கண்டு, வாழ்வில் இன்பம் காணும் பண்பை யுடையவர்கள் இந்தியர்கள். உறைவிடம் வேறு, உழுமிடம் வேறு என்ற மேலை நாட்டாரது கொள்கையை அறியாதவர்கள் இந்திய விவசாயிகள்.

தனது உழைப்பு, தனது குடும்பத்தினரது உழைப்பு, வேலைக்கு வைத்திருக்கும் உண்மையில் (உறவு கொண்டாடி, உறவைப் போலிருக்கும்) ஒன்றிரண்டு உதவிப் பையன்களைக் கொண்டு அநேகமாக நடத்தப்பட்டு வருவது இந்திய விவசாயம். தலைமுறை தலைமுறையாக உரிமை எடுத்து வேலையில் நிற்கும் அவ்வேலைக்காரர்களது வாழ்க்கை அவனது வாழ்க்கை முறையோடு பின்னப்பட்டிருப்பதை அவர்கள்போல் அவனும் உணர்கிறான். சம்பளத்திற்காக வேலை செய்யவில்லை. அதிகாரம் செலுத்துவதற்காகவே வேலை வாங்கப்படவில்லை. அந்நிலையில் மேலை நாடுகளிலுள்ள சில வேலைக்காரர்—எஜமான் பிரச்னை இந்தியக் கிராமப் பொருளாதாரத்தில் ஏற்பட வழியில்லை. நெற் சம்பளம் என்ற முறையும், பண்டிகைகள் காலத்தும், விழாக்கள் காலத்தும் புதுத் துணிமணிகள் என்ற முறையும், எப்பொழுதும் வீட்டுடன் மத்தியானச்சாப்பாடு என்ற முறையும், முக்கியமான காலங்களில் (திருமணத்தின் போதும், பிரசவ காலங்களிலும்) தகுந்த நன்கொடைகள் என்ற பழக்கமும், கிராமவாசியையும் அவன் பண்ணைப் பையனையும் நன்கு பிணைக்கும் சங்கிலிகளாய் விளங்கியிருக்கின்றன. வீட்டுப் பையனைப்போல் வளருகிறான் வேலைக்

காரப் பையனும்! இதை மேலை நாட்டினர் எளிதில் அறிய முடியாது. அங்குள்ள வியாபார ஒப்பந்தம் போலுள்ள எஜமான் வேலையாள் ஒப்பந்தம் நம் நாட்டில் என்றென்றும் இருந்து வந்திருக்கவில்லை.

மேலும், பெரும்பாலும், இந்திய தேசத்தில் மேலைத் தேசங்களைப் போலல்லாது, மக்கள் தேவை மிக மிகக் குறைவானதால், சாதாரணமாக, ஒரு கிராமத்திற்கு வேண்டியது அந்த அந்தக் கிராமத்திலே, அல்லது அந்த அந்தத் தோட்டத்திலே பெரும்பாலும் உற்பத்தி செய்யப் படுகின்றன. வீட்டிற்கு வேண்டிய பொருள்கள் முடிந்த வரை வீட்டிலேயே தயார் செய்யப் படுகின்றன. அதைக் கிராமவாசி ஒரு படிப்பாகவும் ஏற்றுக் கொள்ளுகிறான். பசுக்களும், காய்கறித் தோட்டங்களும், கோழிகளும், பயிர் செய்யும் இந்தியக் கிராம வாசிக்கு அவனவனுக் கென்று பெரும்பாலும் உண்டு.

வெவ்வேறு தொழில்கள் செய்யப்பட்ட காலத்தும், தொழில்கள் நூற்றுக்கு 75 சதவீதம் நம் நாட்டில் ஊதியத்திற்காகச் செய்யப்படவில்லை. ஊதியத்திற்காக மட்டும், மேலைநாடுகளைப் போல், இந்தியாவின் கிராமக் கைத் தொழில்களும் அமைந்திருக்குமானால், அவை வெளி நாடுகளுக்கு மட்டும் ஏராளமாக அனுப்பப் பட்டு வரலாம். வெளிநாட்டு யாத்ரீகர்களுக்கும், நமது நாட்டு மிகுந்த பணக்காரர்களுக்கு மட்டும் அனுப்பப் படலாம். ஆனால் அது அவன் முறையன்று; தனது ஆனந்தத்திற்காகவும், கலையின் பூரணத்துவத்துக்காகவும் உழைக்கும் இந்தியக் கிராமக் கைத் தொழிலாளி, பொருளின், அமைப்பு முடிந்தவுடன், ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக் கூட அந்தப் பொருளைக்கொடுக்க முன்வந்து விடுகிறான். மற்றவர்களும் கண்டு தனது சிருஷ்டியின் பெருமையில் ஈடு படுவதைத்தான் அவன் தன் பரிசாக எதிர்பார்க்கிறான். அவன் ஊதியத்

திற்காக மட்டும், மேலே நாடுகளில் அநேகமாய்க் காணப்படுவது போல், வேலை செய்திருந்தால், அந்த அற்புதமான பண்பாட்டை அவனது பொருள்களில் அவனால் தேக்க முடியாது. கொடுத்ததை வாங்கிக் கொள்கிறான். இதை நம் நாட்டில் யாவருமறிவர்; இதை அறிய முடியாமல் 'ஏன் இவ்வளவு எளிதாக அருமையான பொருள்கள் கொடுக்கப் படுகின்றன' என்று எவ்வளவோ மேலே நாட்டு யாத்ரீகர்கள் திகைத்திருக்கின்றனர்.

பட்டுப் பூச்சி வளர்ப்பது, தேனீக்கள் வளர்ப்பது, பனையிலிருந்து வெல்லம் எடுப்பது, கருப்பட்டி செய்வது, கரும்பிலிருந்து தேன் பாகு எடுப்பது, தந்தம், பட்டு, வாசனைத்திரவியங்கள் செய்வது முதலிய எல்லாவிதமான தொழில்களிலும், நம் நாட்டின் பண்பாடு ஊருருவி நிற்பதைப் பார்க்கிறோம். தொன்றுதொட்டு வந்த சமுதாயத்தின் அம்சம் அது. இந்தியாவில் பயிரோ அல்லது குடிசைத் தொழிலோ ஒரு கலையாகவே வளர்ந்து வந்திருக்கிறது. இந்தியப் பண்பாட்டின் பக்குவத்தைத் தேக்கி நிற்கும் ஒரு பொருளாய் அமைந்திருக்கிறது.

இந்தியக் கிராமங்களில் காணப்படும் நார்க் குடைகள் போல் உலகெங்கும் பார்க்க முடியாது. மழைத் துளிகள் விழாமல் பாதுகாப்பதுடன், உடலுக்கு ஒருவித உஷ்ணத்தையும் கொடுக்க வல்லது. நார்களினால் பின்னப்பட்டு, முழங்கால் வரைக்கும் வந்து விழக்கூடியவை இந்த நார்க் குடைகள். ஆறு ரூபாய்க்கு இங்கிலாந்தில் செய்த குடையை வாங்கியனுபவிக்கிறவர்களுக்கு இந்த நார்க் குடைகளைத் தெரிந்திருக்க முடியாது; தெரிந்திருந்தாலும் இவற்றின் பெருமையை அனுபவித்திருக்க முடியாது.

நமது நாட்டில் தைலங்கள் காய்ச்சப்படுகிறது என்றால், கொடுத்த பக்குவம் தவறிவிடில், உடனே தைல எண்ணெய்கள் கீழே கொட்டப்பட்டு விடுகின்றன. இத்

தகைய நாணயத்தால்தான் இந்தியாவில் இன்னும் எத்தனையோ தைலங்களுக்கு எவ்வளவோ மதிப்பும், குணமுமிருக்கின்றன. மேலை நாட்டு வைத்தியங்களால் தீர்க்க முடியாத நோய்களையும் நம் நாட்டுச் சில தைலங்கள் தீர்த்து வைக்கின்றன என்பது நாம் யாவரும் அறிந்த உண்மையே. தைலம் காய்ச்சுகிறவர்களுக்கு இது பெருமையையும் அதையொப்பப் பொறுப்பையும் கொடுக்கிறது.

இந்திய நாட்டில், பொருளாதாரத்தை, ஒரு கலை என்றால் மட்டும் போதாது. ஒரு வாழ்க்கை முறை என்பதும் பொறுத்தம் அல்ல. அதை ஒரு 'சமயம்' என்றே சொல்லலாம்.

குடிசைக் கைத்தொழில்கள் எங்கும் பெருகி வளர வேண்டும். யானைக்கு யானைதான் ஆதாரம் என்றபடி அதற்கு நாம் தான் பரிபூரண ஆதரவு கொடுக்கவேண்டும். மேலை நாட்டிலிருந்து அவர்கள் விரும்பினாலும் நம் நாட்டுக் குடிசைத் தொழிலைக் காப்பாற்ற முடியாது. நம் நாட்டுப் பணக்காரர்களும் அதைச் செய்ய முடியாது. சுதேசியத்தின் அவசியம் இன்னும் போய்விடவில்லை. நமது கலை ஞானத்தை நாம் சிரத்தையுடன் பெருக்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் குடிசைத் தொழில்கள் தாமாகவே வளரும்.

குடிசைக் கைத்தொழில்கள் தான் இந்திய நாட்டின் கிராமப் பொருளாதாரத்தில் காணக்கூடிய அசதியைப் போக்கவல்ல மருந்து என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பூர்விகமாக வந்துள்ள நமது கிராமத்துக் கைத்தொழில்கள் நமது மண்ணுக்கு ஏற்றவை. போதிய வருவாயை நமது ஏழை கிராமவாசிக்குக் கொடுக்கவல்லவை; பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு பொழுது போக்குக் கல்வியாயுமிருக்கும். சோம்பேறித்தனத்தையும் ஓட்டிவிடும். கூட்டுறவுக் கைத்தொழில் சங்கங்கள், மிகவும் அநுசரணையான ரீதியில் ஏற்பட்டால், குடிசைத் தொழில்கள் நமது நாட்டில் செழித்து வளர மிகவும் உதவியாயிருக்கும்.

# 9

## கிராம அமைப்பு

அருமையான சில கொள்கைகளை ஒரு சமுதாயம் எப்படிக் காப்பாற்றி வந்திருக்கிறது என்பதைத் திரும்பத் திரும்பப் பார்ப்பது தவருகமாட்டாது. பழையன வேண்டும், அதோடு புதியவையும் அதிகம் வேண்டும். வாழ்வின் வளர்ச்சிக்குப் பண்டைநாள் கொடுக்கும் அரும் பெரும் உண்மைகளோடு அவ்வப்போது அனுபவம் கொடுக்கிற உண்மைகளும் சேர வேண்டியதுதான். அஃதின்றேல், வாழ்க்கை ஒரு தேக்கமாக மாறிவிடுகிறது. புதிது என்பதற்காக மட்டும் ஒன்றை விரும்பிவிடக் கூடாது; பழையது என்பதற்காக மட்டும் ஒன்றை அழித்துவிடவும் கூடாது.

மனிதனது பெருமை அவன் இயற்கையை ஊடுருவி நின்று ஆராய்ந்து அதன் பெருமையை உணரும் போது ஏற்படுகிறது. அது காரணமாக இயற்கை அவனுக்குக் கொடுத்திருக்கும் சில ஒப்பற்ற வசதிகளை அறிந்து அவன் பயன் படுத்திக் கொள்கிருன். அத்தகைய சிறந்த சாதனையில் ஒரு பகுதிதான் என்ஜினியரிங் கலை. இயந்திரங்களையும் கருவிகளையும் அவன் கையில் கொடுத்தது, இயந்திர இன்ஜினியரிங் கலை. கட்டடங்களையும் பாலங்களையும் ரோடுகளையும் போட அவனுக்கு உதவியது அவனது கட்டட என்ஜினியரிங் கலை. அவனுக்கு நீராவியையும், மின்சாரத்தின் சக்தியையும் காட்டினது அவனது ரஸாயன (சக்தி) இன்ஜினியரிங் கலை. அவன் சுற்று வட்டத்தையும் தெருக்களையும் சுத்தமாக வைத்திருப்பதற்குப் பயன் பட்டிருப்பது அவனது சுகாதார என்ஜினியரிங் கலை.

இந்த நாலு விதமான இன்ஜினியரிங் கலைகளையும் நன்கு முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டவர்கள், மேலை நாட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இந்த இன்ஜினியரிங்கலைகள், அந்நாடுகளில் (ருஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜர்மனி, இத்தாலி) கிராமங்களையெல்லாம் மிகவும் அழகும் பயனும் பெறும் படி சீர்திருத்தி அமைத்து விட்டன. சரியானபடி காற்று வசதியோ, ஒளி வசதியோ இல்லாமல் இருக்கும் நமது கிராமத்தின் வீடுகளுக்கும், சாக்கடையும் குப்பையும் பல் வேறு அசுத்தங்களும் கலந்து காணக்கிடக்கும் நமது கிராமத்து வீதிகளுக்கும் ஒரு சிறந்த படிப்பினை கொடுக் கும் வண்ணம் மேனாட்டுக் கிராமங்கள் தோற்றமளிக் கின்றன.

கட்டட, ரஸாயன, சுகாதார என்ஜினியரிங் கலை களின் பரிசிலனைகளையும், வளர்ச்சிகளையும், வசதிகளையும் நாம் உபயோகப்படுத்திக் கொள்வோமானல் நமது கிரா மத்துச் சீர் அமைப்பு மிகவும் எளிதாகும். நீர்த்தேக்கங் களின் பெருமையையும் அவை சாதிக்கும் மகத்தான காரி யங்களையும் முன்னொரு அதிகாரத்தில் பார்த்தோம். ரோடு களின் முக்கியத்துவம் என்ன என்பது நாம் யாவரும் அறிந்ததே. விளைபொருள்கள் வந்து சேருவதற்கும், உரம் போய்ச் சேருவதற்கும், ஜன நடமாட்டத்திற்கும், வாகனங்கள் செல்வதற்கும், சரியான ரோடுகள் இல்லா விட்டால் அந்தக் கிராமமே ஒரு தனித்த தீவுபோல் ஆகி விடுகிறது. நம் தேசத்தில் இன்னும் எத்தனையோ கிரா மங்கள் இந்நிலையில் இருக்கின்றன. அது மக்கள் வாழ்க்கை முறையையும் சிந்தனை சக்தியையும் பாதிக்கும் வண்ணமிருக்கிறது. செப்பனிடவேண்டிய கிராமத்து ரோடுகளும் எவ்வளவோ இருக்கின்றன. மழைக்காலம் வந்துவிட்டால் அவையெல்லாம் ஓடைகளா அல்லது பாதைகளா என்று தெரியாமல் போகும் அளவில் எவ்வ ளவோ கிராம ரோடுகள் இருக்கின்றன. சரியாகப்

போடப் பட்டுள்ள சரல் சாலைகளும் ஆங்காங்கு கவனிப் பாரற்றுத் தூர்ந்துபோய் வருவது நாம் சாதாரணமாகப் பார்க்கக் கூடியதும் உடனடியாக்க் கவனிக்க வேண்டிய விஷயமுமாகும். நேரான பெரும் ரஸ்தாவுக்கும், கடை வீதிக்கும், தன் விட்டிற்கும் போகக்கூடிய அளவில், சரியான வண்டிப்பாதைகளை நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமவாசியும் எதிர்பார்க்கிறுன். அது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமும் நியாயமான விஷய முமாகும்.

அந்த அந்தக் கிராமத்துப் பிரமுகர்கள், தங்கள் தங்கள் பஞ்சாயத்துக்கள் மூலமாகவும் நன் கொடைகள், ஊர்வரிகளைக் கொண்டும், ஜில்லா போர்டாரைக் கொண் டும், மத்திய சர்க்கார் உதவிநிதி, வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டும், இந்தக் கிராம ரோடுகள் அமைப்பு வேலையைச் செய்து முடிக்க வேண்டும். கிராமத்துப் பல் வேறு சேவா சங்கங்கள் இந்த முயற்சியில் பெரிதும் ஒத்துழைக்க வேண்டும். படித்த மாணவர்களும் மாணவி களும், சமுதாயம் தங்களுக்குக் கொடுத்திருக்கும் அந்தப் படிப்பிற்கு ஒருசிறிது கைம்மாருகவாவது தங்கள் உடலு ழைப்பையும் பணவசதியும் கொடுத்து இந்தத் துறையில் இறங்குவார்களாஞல் அது மிகவும் சிறப்புடையதாகும்.

அடுந்தபடியாக முக்கியமான விஷயம், நமது கிரா மத்து வீடுகள். முன் அகன்ற திண்ணை, முதலில் ஒரு அறை, பின் ஒரு முற்றம் அதைச் சுற்றிலும் பத்தி, ஒரு சாமான் வைக்கும் அறை, ஒரு அடுக்களை, இதுவே பூர்வ மாக வந்த தமிழ் வீட்டின் அங்க அமைப்பு. இந்த அங்க அமைப்பைப் பற்றிக் குறையொன்றுமில்லை. முன் அறை ஆண்களுக்கு. இயற்கையோடு இயைந்து அந்த முற்றத் தைச் சுற்றிலும் உள்ள பத்தி முதலியன வீட்டுப் பெண்டு களுக்கு. முன் திண்ணை, செல்லும் வழிப் போக்கர்

இளைப்பாறுதலுக்கு. ஐக்கியப் பட்ட குடும்பங்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.

இந்த மாதிரியான வாழ்க்கை முறையையும் வீட்டு அமைப்பையும் நாம் கால வெள்ளத்தில் இழந்து விட்டோம். அதற்குப் பதில் எத்தனை எத்தனையோ மாறுதல்களை முயற்சிசெய்து பார்த்து, கறையானுக்கும், வறுமைக்கும் பயந்து சிறு சிறு குடிசைகளாக நம் வீடுகள் மாறி விட்டன. காற்றோ, ஒளியோ, காகமோ, மனிதனோ வந்து போக முடியாத நிலைக்கும் வந்து விட்டது வீட்டின் அமைப்பு. வீட்டைச் சுற்றிலும் தேங்கி நிற்பது தண்ணீர்ப் பள்ளங்கள், அசுத்தங்கள். இந்த நிலை உடனடியாக மாற வேண்டியது மிகவும் அவசியம். வருடத்திற்கு 200,000 அன்னைமார், தங்கள் தங்கள் பிரசவங்களில் நம் நாட்டில் இறந்து படுகின்றனர் என்று ஸர் ஜான் மீகா எழுதினால் அதில் தப்பேது? நமது வீடுகளின் நிலைமை அவ்வளவு மோசமாயிருக்கின்றன. மாடுகளின் கொட்டகையா அல்லது மனிதன் குடிலா என்று தெரியாத அளவுக்கு அவ்வளவு மோசமாயிருக்கும் நிலையும் அநேக இடங்களில் இருப்பதை யாவரும் அறிவர். மனித சிந்தனையையே கட்டுப் படுத்தும் வண்ணம் அமைந்திருக்கும் அந்தக் குறுகிய வாசல்களும் தாழ்ந்த கூறைகளும் குறுகிய தெருக்களும் தொத்துவியாதிகளின் பயங்கர விளையாட்டுக்கு உறைவிடமாய் அந்தக் கிராம முழுவதையுமே ஆக்குகின்றன. அவைகளுக்கு மத்தியில் மனித நாகரிகத்தைப் பழிக்கும் வண்ணம் உரக்குழிகள் அமைந்திருக்கின்றன. இந்த நிலைமை முற்றிலும் மாறினால்தான் ஒரு புது இந்தியாவை நிர்மாணம் செய்ய முடியும். முதலாவதாக, ஒவ்வொரு கிராமத்திலும், கூட்டுறவு வீட்டுச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். துரைத்தனத்தார் உதவியைக்கொண்டு அவை உடனடியாக, தற்கால சுகாதார மருத்துவ விதிகளின்படி, வீடுகளையும் தெருக்களையும் அமைத்து, மக்கள் உபயோகத்திற்குக்

கொடுக்க வேண்டும். அந்த அந்த வீடுகளுக்குரிய தொகையை மிகச் சௌகரியமான தவணைகளாக, மிகவும் நீண்டகால அளவில் வசூலிக்க வேண்டும். எங்கெங்கு குடியானவர்கள் தங்கள் தங்கள் தோட்டங்களில் வசிக்கப் பிரியப் படுகிறார்களோ அதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் மாதர் சங்கம் சிறுவர் சங்கங்கள் ஏற்படுத்தி அவைகள் மூலம் அந்த அந்தக் கிராமத்துச் சுகாதாரத்தை அவ்வப் போது கண்காணித்து வரவேண்டும். சுகாதாரம் என்பது அவ்வளவு அபூர்வமான வஸ்து. நன்கு கவனிக்கப்பட்டா லொழிய அது ஒரு இடத்தில் தங்காது. கிரமத்துக் கிணறு களையும், குட்டைகளையும் கிராமத்து அதிகாரிகள் நன்கு பேணிக் காத்துக் கொள்ள வேண்டும். சுகாதார சம்பந்த மான சினிமாப் படங்கள், பிரசங்கங்கள், விழாக்கள், பள்ளிக்கூடங்கள், பொதுகால்நடைக் கூடங்கள், எல்லோ ருக்கும் கட்டாயப் படிப்பு, இவை கிராமத்தின் செழிப்பை யும் சுகாதாரத்தையும் வளர்க்க உதவி யாயிருக்கும். உப யோகமற்ற உரக் குழிகள், தூர்ந்துபோன குட்டைகள் உடனடியாக மூடப்பட வேண்டும். மூங்கிலும் கீற்றும் மண் வேலையும் கூடிய பெரிய பெரிய கூடங்கள், சொற்பச் செலவில் கிராமத்துப் பொது இடங்களில் அமைக்கப் பட் டால் அங்கு கிராமத்துப் பெண்கள் கூடுவதும், ஒருவருக் கொருவர் கலந்து கொள்வதும் எளிதாகிறது.

அடுத்தபடியாக நமக்கு வேண்டுவது நல்லகுடி தண் ணீர் வசதி. இந்தக் குறையினால் பாதிக்கப்பட்ட கிராமங் கள் எவ்வளவோ, லட்சக் கணக்கில் நமது தேசத்தில் இருக்கின்றன. ஆறுகளில்லாத ஊர்களும் எவ்வளவோ இருக்கின்றன. அருமையான ஆறுகள் குறைந்த தூரத் தில் இருந்தாலும் அதை உபயோகப் படுத்த முடியாதநிலை யில் இருக்கும் ஊர்களும் எத்தனையோ இருக்கின்றன. உப்புத் தண்ணீரைத் தவிர வேறு நல்ல தண்ணீர் கிடைக்

காத இடங்களும் இருக்கின்றன. நல்ல தண்ணீர் விலைக்கு வாங்கப்படும் ஊர்களும் எவ்வளவோ இருக்கின்றன.

பெரிய பெரிய திட்டங்கள் மூலம் வேண்டிய அளவு தண்ணீரைத் தேக்கி, வேண்டுகிற இடத்திற்குக் கொண்டு வந்து, சுத்தப் படுத்தி, பின் தெருக்கள் தோறும் பைப்புகள் மூலமோ அல்லது லாரிகள் மூலமோ கொண்டுவந்து ஜனங்கள் யாவருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். யாவருக்கும் தண்ணீர், உணவு, இருக்க இடம், உடை, மருத்துவம், கல்வி, வேலை, கண்காணிப்பு, இவையல்லவோ, ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமை.

கிராமத்து நிலத்தையும் துரைத்தனத்தார் சரியானபடி பொதுமக்கள் சபையை ஏற்படுத்திக் கண்காணித்துவர வேண்டும். அப்படியில்லாவிட்டால் எவ்வளவோ தடைகள் சுகாதார அபிவிருத்திக்கு ஏற்படலாம். நல்ல சரல் கல் கிடைக்கிறது என்று ஒரு இடத்திலே மக்களனைவரும் கட்டட வேலைக்காக மண்ணைத் தோண்ட ஆரம்பித்து விட்டால் அது நாளாவட்டத்தில் ஒரு பாழுங் குழியாக மாறிவிடுகிறது. அங்கு தேங்கும் தண்ணீரால் மீண்டும் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. வெற்று நிலங்களில் அங்கங்கே பூங்காக்கள் அமைப்பது, கிராம வாசிகளுக்கு வேலைக்குப் பிறகு ஓய்வு கொள்ளச் சிறந்த வசதியைக் கொடுக்கும்.

கடைசியாக, நமது விஞ்ஞானத்தின் வளர்ச்சியை, நாட்டிலுள்ள யாவரும் பயன்படுத்தும்படி அமையவேண்டுமானால், மின்ஸார சக்தி, கிராமாந்தாரங்களில் ஒவ்வொரு வீதிக்கும் வீட்டிற்கும் செல்லவேண்டும். இறைவைத் தோட்டங்களுக்கும், பம்புக் கிணறுகளுக்கும், வீடுகளுக்கும், தெருக்களுக்கும், அதற்கேயுரிய ஒரு புது உத்சாகத்தை மின்சாரம் கொடுக்க முடியும். அத்தகையை நிலை

151809
DR. T. P. M. LIBRARY

நம் நாட்டில் ஏற்படுவதற்கு நமது மின்சார உற்பத்தி நிலை பன் மடங்கு பெருகவேண்டும். மின்சார உற்பத்தி நிலையங்களும் உதவி நிலையங்களும் ஆங்காங்கே நிறுவப்பட வேண்டும். மக்களுக்கு, மின்சாரத்தைத் தவிர வேண்டியமட்டும் வேலையைக் கொடுப்பதோடு, இன்னும் எத்தனையோ கிராமத் தொழிற்சாலைகள் கிராமக் கைத்தொழில்களை ஒட்டி ஆங்காங்கே ஏற்படுவதற்கும் இவை பேருதவியாயிருக்கும். ஜல மின்சாரச் சாலைகளை ஒட்டி, தனி மின்சாரச் சாலைகளும் ஆங்காங்கே நம் நாட்டில் பரவவேண்டியது மிகவும் அவசியம்.

# 10

## கிராமப் புனருத்தாரணம்

இந்திய தேசத்தின் வளம் அதன் கிராமத்தின் வளத்தைப் பொறுத்தே நிற்கிறது. அங்குதான் நாட்டின் பண்பாடு தங்கி வளர்ந்து வருகிறது. அங்குதான் சொல் லொணுக் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

முகலாயர்கள் கால ஆட்சி முடிய மிகச் சிறப்புற் றிருந்த இந்திய கிராமங்கள் பிளாசிச் சண்டை ஆரம்பித்த காலத்திலிருந்தே கீழே விழ ஆரம்பித்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று நிலத்தின் உரிமையை சமுதாயம் இழந்தது; இரண்டு, கிராமத்துக் கைத்தொழில் கள் கைவிடப்பட்டுத் தூர்ந்து போனது.

முகலாயர்கள் ஆட்சி வரைக்கும் நிலம், அந்த அந்தக் கிராம மக்களின் பொதுச் சொத்தாக இருந்தது. விளை பொருளில் ஒரு பங்கு மட்டும் வரியாகக் கொடுக்கப் பட்டது. தொன்று தொட்டு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வழங்கி வரப்பட்ட முறைமை அது; சோழ அரசர்களும், சேர, பாண்டிய மன்னரும், மௌரிய, குப்த அரசர்களும் அந்த முறையைக் கையாண்டனர். பின்னர் வந்த முகம்மதியர் ஆட்சிக் காலத்திலேயும் அந்த முறைதான் பின்பற்றப் பட்டது. தமிழ் அரசர்கள் விளைபொருள்களில் ஆறில் ஒரு பங்கு வாரம் வாங்கினர்; அல்லாவுதீன் கில்ஜி காலத்தில் விளைபொருள்களில் பாதி அரசாங்கத்திற்கு என்று ஏற்பட்டது. சரித்திரத்திலே ஒரு அதிசயம் என்று சொல்லும்படி, துக்ளக் சுல்தான்கள் காலத்தில் விளை பொருள்களில் பத்தில் ஒரு பங்கு வரியாக, விளை நிலங்கள்

முழுவதும் அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருந்தும், வாங்கப்பட்டது. அவர்கள் காலத்தில்தான் எத்தனை எத்தனையோ கட்டாந்தரைகள் விளைநிலங்களாக மாறின. ஷேர்ஷா காலத்தில் அரசாங்கத்துக்குச் சேரவேண்டியது மூன்றில் ஒரு பங்கு என்று ஆக்கப்பட்டது; முதல் முதலாக அவ்வப்போது செய்யும் பங்கீடு கொள்கையும் நிறுத்தப்பட்டு, விளை நிலங்களின் தகுதியைக் கொண்டு, கொடுக்க வேண்டிய, விளைச்சலில் மூன்றில் ஒரு பாகம் என்ன என்பது நிலத்திற்குத் தகுந்தபடி முன்னரே நிர்ணயம் செய்யப்பட்டது. அந்தப் பாகத்தை விளை பொருள்களாகவோ அல்லது முகல் ஆட்சியில் அநுஷ்டானத்தில் இருந்துவரும் கோல்டு மோகர் நாணயங்களாகவோ செலுத்தலாம் என்று அக்பர் சக்கரவர்த்தி காலத்தில் ஆயிற்று. பின்னை நாள் முகலாய அரசர்கள் காலத்திலும், பீஷ்வாக்கள் காலத்திலும் மக்கள் கொடுக்க வேண்டிய அளவு அரைப்பங்காயிற்று. ஆனல் அரசாங்கமே, நிலத்தின் பூரண உரிமையும் பொறுப்பும் உடையதாயிருந்தது. அந்த அந்தக் கிராமத்து மக்கள் அந்த அந்த கிராமத்து நிலங்களை தங்கள் நிலமாகவே கருதி வாழ்ந்தனர். அதைத் தெய்வம் எனவும் போற்றினர்.

அந்த மாதிரியான ஒரு நிலையில்தான் கும்பெனிக்காரர்கள் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர், கூடுமானவரை அதிகமான லாபமும் குறைவான தொல்லைகளும் இருக்கவேண்டும் என்பது அவர்கள் கொள்கை. தாங்கள் வென்ற இடங்களிலெல்லாம், (தம் தேசத்திலுள்ளதைப் போன்ற முறையில்), நிலங்களை எடுத்து அவைகளைத் தன் ஆட்களுக்கும், தன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களுக்கும், தொன்று தொட்டு வரி வசூலித்துத் துரைத்தனத்துக்கு அனுப்பி வந்திருப்பவர்களுக்குமாகப் பங்கீடு செய்து கொடுத்தனர். அதற்குப் பணமும் பெற்றனர்; அதிகாரத்தின் நிழலில் அதற்கு வரியும் வசூலித்தனர்,

நிலத்தை சமுதாயம் இழந்தது. நிலம் வேறு பொருள்கள் மாதிரி கூடுதல் குறைவிற்கு விலை பேசி வாங்கக்கூடிய ஒரு பொருளாக மாறியது. ஆங்கில வியாபாரிகளுக்குத் தொன்று தொட்டு வந்திருக்கும் இந்திய தேசத்தின் முறைமை தெரியாத காரணத்தால் ஏற்பட்ட விபரீதம் அது. அதன் பயன், கணக்கற்ற மக்கள் நிலமற்றவர்களாகப் போனதும், நிலத்தை எடுத்துக்கொள்வதற்காகப் பண மோசடிகளும், நிலங்கள் அடிக்கடி கை மாறப்பட்டு சீரழிந்தும், நாடு வறுமையில் கிடந்து உழல வேண்டிய நிலைமைக்கு வந்ததுமாகும். மக்களது முயற்சிக்கும் தன்னம்பிக்கைக்குமே பங்கம் வந்தது. அதுவரையில் பண்பாட்டையே வளர்த்து வந்த பெரு மக்களைப் போற்றி வந்த சமுதாயம், இந்தப் பணம் படைத்த பெருமக்களையும் வழிகாட்டிகளாக ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது. அந்தப் பெரு மக்களும் தங்களை நாட்டின் வழிகாட்டிகளாகும் வண்ணம் திருத்திக் கொண்ட அளவிற்கு நாட்டிற்குச் சேமம் இருந்தது. ஆனல் அவர்கள் அதைச் செவ்வனே செய்தாரில்லை. கிராமத்துப் பெருவாரியான வரும்படி அவர்களைச் சார்ந்தன. ஆனல் மக்கள் சுபிட்சத்தைக் கவனிக்காமலோ அல்லது நிலத்தைக் கவனிக்காமலோ சென்றது அவர்கள் வாழ்க்கை முறை. அது நம் சரித்திரத்திலே காணக் கிடக்கும் வருந்தத் தக்க விஷயங்களில் ஒன்று.

கிராம வாழ்க்கை வறுமையில் விழுந்ததற்கு மற்ருெரு காரணம் (பதினெட்டாம் நூற்ருன்டின் இறுதியில் ஏற்பட்டது) கிராமக் கைத்தொழில்கள் சின்ன‌பின்னமாக்கப் பட்டதே. மேலை நாட்டு நாகரீகம், மேலை நாட்டு ஆட்சி, அடக்குமுறை, ஆங்கில முறையில் உற்பத்தி, மேலை நாட்டுப் பொருள்களின் வேகம், நமது மக்களின் அறியாமை, எல்லாமாய்ச் சேர்ந்து, நாட்டின் அதி சிறந்த கைத்தொழில்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தன. உலகப் பிரசித்தி பெற்ற, பெரிய பெரிய மஸ்லின் குடிசைக் கைத்

தொழிற்சாலைகள் மூடப்பட்டன. 'பனித்துளி' என்றும் 'நெய்த காற்று' என்றும் 'கோடை மேகம்' என்றும் பல வாறு புகழப்பட்ட இந்திய மஸ்லின் துணிகளுக்குத் திடீ ரென்று கிராக்கி நின்றது. இங்கிலாந்து தேசத்தில் நெய்யப் பட்ட காரணத்தால் அங்கிருந்து வந்துள்ள துணிக்குப் பெருமதிப்புக் கொடுக்கப்பட்டது. மரவேலைகளும், சித்திர வேலைகளும், உரோம வேலைகளும், உலோக வேலைகளும் அவ்வாறே பாதிக்கப்பட்டன. பல துறைகளிலும் ஆதரவும் வேலையுமிழந்த இந்தியக் கிராமக் கைத் தொழிலாளிகள், ஆங்கில முறையில் ஆங்காங்கு தோன்றிய புதிது புதிதான ஆலைகளில், பெருக்குபவர்களாகவும், மிஷின்களோடு வேலை செய்யும் மிஷின்களாகவும் மாறி, ஆயிரக்கணக்கில் புதிதாய்த் தோன்றின பட்டணங்களில் கூட ஆரம்பித் தனர். வாழ்க்கையில் ஆர்வமும் உற்சாகமும் அவர்களிடம் குறைந்தது. கிராம வாழ்க்கையும் அதன் பொருளாதார மும் மிகவும் பாதிக்கப்பட்டது.

ஆகவே கிராம இந்தியா வாழ்ந்தாலொழிய நமது நாடு வாழ முடியாது. இதை அறியாதவர்கள் இருக்க முடியாது. கிராம இந்தியாவை மீண்டும் வாழ்விக்க எவ்வளவோ முயற்சிகள் ஆங்காங்கே எடுக்கப்படுகின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை ஈண்டு பார்ப்போம். நமது தேசத்தில் கிரா மப் புனருத்தாரணத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டியவர் காந்தி அடிகள். கிராமப் பொருளாதாரத்தின் விடுதலை தான் தேசீய விடுதலையைக் கொடுக்கும் என்பது அவர் கண்ட முடிவு. கைராட்டினம் தான் தேசீயப் போரின் சின்னம் என்று சொல்லி, தேசத்திற்குக் கை ராட்டினத் தைக் கொடுத்தவர். பழங்காலத்திற்குக் கொண்டு செல்லு கிறார் என்று கூக் குரலிட்டவர்களும் நாளாரம்பத்தில் அதன் உண்மையை அறியத் தலைப்பட்டார்கள். கிராமப் பஞ்சாயத்து, கிராம வாழ்க்கை, கிராமப் பொருளாதாரம் இவற்றிற்கு உயிர் நாடி கொடுத்தது, காந்தி அடி

கள் தேசத்திற்குச் சாதித்திருக்கும் மகத்தான சாதனை களில் ஒன்றாகும்.

1921-ம் ஆண்டில் காங்கிரஸும் கை ராட்டினத்தை ஒப்புக் கொண்டது. 1923-ல் அகில இந்திய நூற்போர் சங்கம் ஏற்படுத்தப் பட்டது. கதர் ஆடை தேசீய ஆடை யாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தச் சங்கத்தின் ஆதர வில் லட்சக்கணக்கான கிராம வாசிகள் தங்கள் தங்கள் இராட்டின வேலைக்குத் திரும்பினர். அந்த அந்தக் கிரா மங்களிலே நெசவு வேலையும் செழித் தோங்கு வதற்கு சங்கம் எவ்வளவோ உதவியைச் செய்திருக்கிறது.

ராட்டினத்தைப் போல் பலவகைப் பட்ட கிராமக் கைத்தொழில்களையும் கிராமக் கலைகளையும் காப்பாற்றிப் பேணி வளர்த்தால் நாடு சுபிட்சமடைய முடியும் என்பது காந்திஜியின் அருமையான முடிவு. காங்கிரஸும் 1934-ம் வருடம் அகில இந்திய கிராமக் கைத் தொழில்கள் சங்கம் ஒன்றை நிறுவிற்று.

கிராமப் பண்பாட்டை வளர்க்கும் முறையில்தான் கிராமத்துக் கல்வி முறையும் அமைய வேண்டும் என்ற காந்திஜியின் ஒரு தனிசிறந்த முடிவிலிருந்துதான் தோன் றியது 1937-ம் வருடம் காங்கிரஸ் தயாரித்த வார்தாக் கல்வித் திட்டம். கிராமக் கைத் தொழில்களையும், கலை களையும், பயிரையும் ஒட்டி கிராமக் கல்வி வளர வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய அம்சம். ஒரு இந்தியன் இந்தியனாக வளர வேண்டும் என்ற முறையில் வகுக்கப் பட்டிருப்பது இந்தத் திட்டம். குறிப்பிட்ட அளவுக்கு மேலுள்ள அதிகப்படியான நிலங்கள் எடுக்கப் பட்டு சமுதாயத்தாரால் நிலம் இல்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் படல் வேண்டும். உழுகிறவனுக்கே நிலம் கொடுக்கப் படல்வேண்டும். கிராமத்துக் கட்டாந்தரைகள் கூட்டுறவு முயற்சியால் பண்படுத்தப்பட வேண்டும்.

1950-ம் வருஷ விலைவாசிப் பட்டியல் படி மாதம் ஒன்றுக்கு நூறுரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ள வனும் 2000 ரூபாய்க்குக் கூடுதல் வருமானம் வரக்கூடிய வனும் சமுதாயத்தில் இருக்கக் கூடாது. மாபெரும் தொழிற்சாலைகளும், பொது ஜன சேவாஸ்தாபனங்களும், சமுதாயத்தாரால் நடத்தப்பட வேண்டும். குடிசைத் தொழில்கள் ஓங்கி வளர வேண்டும். வரிவசூலில் 50% அந்த, அந்தக் கிராமங்களிலே பஞ்சாயத்தாரால் செலவு செய்யப்பட வேண்டும். அந்நிய நாட்டுக் கம்பெனிகளும் சமுதாயத்தின் சொத்துகளாக மாற்றப்பட வேண்டும். கிராமவாசிகளின் தேவைகளுக்குக் கூட்டுறவுச் சங்கங் களும், அவர்களது சேமிப்புக்கு உபகாரம் செய்யும் வண்ணம் பாங் வசதிகளும் அமைய வேண்டும் என்பதும் காந்திஜீ கிராமங்களுக்காகத் தொகுத்த 'சர்வோதயா' திட்டத்தின் அடிப்படையாகும். ஏழ்மையைக் களைந்து நாட்டில் க்ஷேமம் நிலைபெற்று நிற்கச் சிறந்த வழி அது. நிலம் கடைசி நிலையில் சமுதாயத்திற்கே சேர வேண்டும் என்பது அவர் கருத்து. நமது உழைப்பின் தன்மையே நமக்கு மேன்மையைக் கொடுக்கும் என்பது அவரது சீரிய கொள்கைகளில் ஒன்று. சில சில பகுதிகளைப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு கிராமத்திலும் அங்குள்ள உழைப்பு முழுவதும் அதனில் செலுத்தி, (Labour bank; Labour Concentration) நாட்டைப் பலமடையச் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினர். அவரது கிராம சுயராஜ்யத் திட்டங்கள், நாட்டை வறுமையினின்றும் விடுதலை செய்ய வும் வாழ்வாங்கு வாழவைத்தலுக்குமாக ஏற்படுத்தப் பட்டவை.

அடுத்த படியாக நிற்பது தாகூரின் முயற்சி. கிராமங் களில் ஏழ்மை நிலை மட்டும் இல்லாதிருந்தால் போதாது. அழகுறவும் விளங்க வேண்டும் என்றுவிரும்பியது அவரது கவிதை மனம். எங்கு பார்த்தாலும், ஒரு வித தூசு,

அசுத்தங்களும் இல்லாமல், மிகவும் துப்புரவாய் கிராமங்கள் வைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அதற்காக 1921-ஆம் ஆண்டு 'ஸ்ரீநிகேதன்' என்ற கிராமப் புனருத்தாரணச்சாலை யொன்றையும் போல்பூரில் நிறுவினார். கிராமங்களை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியது, பொதுநல ஊழியர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் கிராமத்தின் அன்றாட வாழ்க்கையில் உதவிகள் முதலியவைகளுக்காக அக் கல்விச் சாலையில் திட்டங்களும், ஆராய்ச்சிகளும் வகுக்கப்பட்டு வருகின்றன. காந்தீயத்தின் இலட்சியம் நிறைவேறும் பொழுதுதான், தாகூர் கண்டிருக்கும் கனவுகள் நனவு பெறும் காலம் வரும். நாட்டின் அடித்தளம் காந்தீயத்தையே எதிர்பார்த்து நிற்கிறது.

மூன்றாவதாக, இந்தியாவில் வேலை செய்து வரும் எத்தனையோ சமய ஸ்தாபனங்களும் கிராமப்புனருத்தாரண வேலைக்கு மிகவும் உபயோகமாயிருந்து வருகின்றன. முக்கியமாகக் கிறிததுவப் பாதிரிமார்களைச் சொல்ல வேண்டும். அவர்கள் செய்திருக்கும் வேலை மிகவும் அதிகம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசிகளும், தொண்டர்களும் ஆங்காங்கு செய்து வரும் காரியங்களும் மிக அபூர்வமானவை. புதுப் புதுப் பள்ளிக்கூடங்கள், ஆங்காங்கு துவங்கி சமயக் கல்வியையும், கலை விஞ்ஞானப் படிப்பினையும் வளர்த்தல், இலவச மருத்துவ சாலைகள் ஏற்படுத்தல், இலவசமாக ரோடுகள் போடுதல், இயற்கையினால் சேதங்கள் ஏற்படும் காலத்து மக்களுக்கு அரும்பெரும் பணியாற்றல், இன்னும் எத்தனையோ தொண்டுகளை அவர்கள் இயற்றி வருகின்றனர். இந்து சந்நியாசத்தின் பெருமையை அவர்கள் மூலமாகத்தானோ என்னவோ உலகமே அறியக் கூடிய காலம் வரும் என்ற பாணியில் அமைந்திருக்கிறது அவர்களது சீலமும் செய

லின் திறமும். இராமகிருஷ்ண மடத்துக்குப் பூரண ஆதரவும் பணவசதியும் கொடுப்பது சமுதாயத்திலுள்ள எல்லோரது பொறுப்புமாகும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொரு பையனையும் (அவன் சம்மதத்தின் பேரில்) வரும்படியில் ஒரு பகுதியையும் நாம் அவர்களுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தர்மத்தைக் காப்பாற்றும் தூண்கள் அவர்கள்.

நான்காவதாக சில பண்பு வளர்க்கும் சங்கங்களும் (Cultural Societies) ஆங்காங்கே நிறுவப்பட்டு, கிராமங்களுக்கு ஒரு தனிச் சேவையும் உதவியும் செய்து வருகின்றனர். மாணவர்களது கிராம சேவா சங்கங்கள் (நமது கல்லூரிகளும் இந்தத் துறையில் விழிப்படைந்து வருவது ஒரு நல்ல காலத்திற்கு அறிகுறியாயிருக்கிறது. கிராம சேவையும் கல்லூரி வாழ்க்கையில் அதன் எத்தனையோ பொழுது போக்குகளுக்கு மத்தியில் உயர்ந்த இடம் பெற்று வருவது மிகவும் ரசமான விஷயம்), செஞ்சிலுவைச் சங்கங்கள், சிசு பரிபாலன சங்கங்கள், தாய்மார் சங்கங்கள், தேசீய ஊழியர்கள் சபை (Servants of India Society) இன்னும் எத்தனையோ சங்கங்கள், கிராம வாழ்க்கையில் சுகாதாரத்திற்கும், படிப்பிற்கும், பயிருக்கும், போக்கு வரவுச் சாலைகள் பராமரிப்பிலும் தங்கள் கவனத்தையும் உதவியையும் செலுத்தி வருவது மிகவும் போற்றற்குரியது.

ஐந்தாவதாக, ஆங்காங்கு ஏற்பட்டுள்ள கிராமவாசிகளின் கூட்டுறவுச் சங்கங்களும், அவர்களது கிராமத்தின் நிலைமையை நன்கு பேணி வளர்க்கும் நிலையில் அமைந்திருக்கின்றன. இந்தியக் கிராமப் பொருளாதாரத்தின் பலவித சங்கடங்களைத் தீர்த்து வைக்கக்கூடியது கூட்டுறவு இயக்கமேயாகும். அந்தக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் 1890-ஆம் ஆண்டிலே, ரானடே, வெடர் பர்ன் போன்ற கூட்டுறவுக் கலைமேதைகள் சொன்னது போலவும், பின்னை நாளில் நிக்கல்சன் என்ற ஆங்கில விமர்சகன் ஒருவன் எச்

சரித்தது போலவும், நமது கிராமத்தின் எதிர்கால சுபிட்சம் நிற்கிறது. எளிய முறையில் பண வசதிகள், நன்ருயமைக் கப்பட்ட வீட்டு வசதிகள், அவனது பயிருக்கு நல்ல வித மான வித்துக்கள், உர வகைகள், அவனது பொருள்களை விற்றல், அவனுக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக் கொடுத்தல், வேலையில்லாக் காலங்களில் அவனுக்கு ஆதரவு கொடுத்தல் இவை போன்றவற்றை, கூட்டுறவு இயக்கங்களினுல்தான் அவன் பெறமுடியும். கிராமத்துப் பிரமுகர்களும் துரைத்தனத்தாரும் வேண்டியதற் கதிகப் படியாகவே இக்கூட்டுறவு சங்கங்களுக்கு உதவி செய்யக் கடமைப் பட்டிருக்கிருர்கள்.

ஆருவதாக, கிராமவாசிகள் சங்கம். மிராசுதார்களுட னும், ஆங்கில ஆட்சியுடனும், ஜமீன்தார்களுடனும் சண்டை போட வேண்டிய காலத்திலே மிகப் பயனுள்ள வையாயிருந்தது இந்தச் சங்கங்கள். அந்த மாதிரிச் சங்கங் களை காந்திஜீயும், முகம்மது அலியும், சௌகத் அலியும், பண்டிதநேருவும் தலைமை தாங்கி நடந்தினர். ஆனுல் பின் னைய நாட்களில் அகில இந்திய விவசாயிகள் சபை காங்கி ரசை விட்டுப் பிரிந்து வந்து தனித்து இயங்குகிறது. விவசாயிகளின் நிலைமையைக் காப்பாற்றுவதற்கும், அவர் களது உரிமைகளைக் காப்பாற்றுவதற்கும் இத்தகைய சங்கங்கள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

கடைசியாகப் புதுக் கிராம நிர்மாணத்திற்கு, சிறந்த வகை முயற்சிகளுடன் உழைத்து வருபவர்கள் துரைத் தனத்தார் ஆவார்கள். அது அவர்களது கடமையே. அதற் காகவே இருப்பவர்களல்லவா அவர்கள்! கிராமப் பஞ்சா யத்து, ஜில்லா போர்டு, மத்திய சர்க்கார். மாகாண சர்க் கார் இவர்களது பெரும் பெரும் திட்டங்கள், சட்ட வசதி கள், இன்னும் எத்தனையோ துரைத்தனப் பாங்கில் நடக் கும் காரியங்கள், டிபார்ட்மெண்ட் அலுவல்கள், கிராம

அபிவிருத்தியை முன்னிட்டுச் செய்யப்படுகின்றன என்றாலும், அது அவர்கள் கடமை ஆகிற காரணம் பற்றி அவைகளை விடுத்துக் கிராமவாசிகளுக்குச் சில துறைகளில் துரைத்தனத்தார் செய்து வைத்திருக்கும் அழகான சில வசதிகளை மட்டும் குறிப்பிட்டு மேலே செல்லுவோம்.

அரசாங்கத்திற்கு மக்கள் யாவருக்கும் கல்வியும், மருத்துவ உதவியும், நோய் காலத்துக்குத் தகுந்த பராமரிப்பும், உணவும், உடையும், வேலையும் கொடுக்க வேண்டிய பெரும் கடமை இருக்கும்பொழுது, நமது நாட்டிலுள்ள நிலைமையில் அவர்கள் செய்து வந்திருப்பது மிகவும் குறைவாகவே தோன்றும். ஒரு இரு நூறு ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வறுமையை ஒன்றிரண்டு ஆண்டுகளில் போக்கிவிட முடியாது. நாடு மக்களிடமிருந்து இன்னும் எத்தனையோ உழைப்பையும் தியாகத்தையும் எதிர் பார்க்கிறது. அரசாங்கம் செய்ய வேண்டிய பொறுப்பு இனிமேல்தான் அதிகம் இருக்கிறது.

எனினும் அவர்கள் செய்திருக்கும் ஒன்றிரண்டு காரியங்களை மட்டும் இங்கு குறிப்பிடுவது அவசியம். அவர்கள் செய்யாமல் விட்டிருக்கும் காரியங்கள் எவ்வளவோ உண்டு. காலத்தில் நம்பிக்கை வைக்கும் நாம் காலத்திற்கும் பொறுமைக்கும் அதை விட்டுவிடுவோம்.

துரைத்தனத்தார் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன விஷயத்தில் சாதித்துள்ள சாதனை மிகவும் போற்றற்குரியது; மெச்சத்தக்கது. துரைத்தனத்தாரது கம்யூனிட்டி புராஜெக்ட் (Community Project) தேசியப் பிராந்தியங்கள், வளர்ப்புத்திட்டங்கள் (National Extension Service.) மிகவும் போற்றற்குரிய திட்டங்கள். மிகவும் தயங்கும் இந்திய தேசத்துப் பணத்தை, நகைகளிலும் கற்களிலும் போடுவதை மாற்றித் தொழில்களில் செலவிடச்

செய்வது ஒரு பெரும் காரியம். நாட்டின் தனித்த பல பகுதிகளில், அங்குள்ள பொருள்கள் முன் வருமாயின், அரசாங்கமும் முன்பொருள் கொடுத்து, அந்தப் பிராந்தியங்களுக்கு வேண்டிய மருத்துவ, கல்வி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தல், தொழிற்சாலை, ரஸ்தாக்கள் ஏற்படுத்தல் போன்றவை தனி சிறந்த வழிகளாம். இந்திய தேசத்திற்குக் கொடுக்கப்படும் பணஉதவி அட்லாண்டிக் சமுத்திரத்தில் எறியப்படும் பணத்திற்குச் சமானம் என்று சொன்ன ஆங்கில ஆசிரியனுக்குப் பதில் சொல்லும் வண்ணம் அமைந்திருக்கிறது இந்தப் பிராந்தியத் தனி வளர்ச்சித் திட்டங்கள். இந்தத் திட்டங்களைக்கொண்டே, வியாபாரம், விவசாயம் சம்பந்தமான பல விஷயங்களைக் கிராமங்கள் தோறும் சினிமாப் படங்கள் மூலம் திரையில் போட்டு எடுத்துச் சொல்லி, வாழ்வின் அழகை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பையும் துரைத்தனத்தார் எடுத்துக் கொள்ள வேண்டும். இது அவர்கள் திட்டத்திலிருந்தும் சரியானபடி முக்கியத்துவம் கொடுக்கப்படாமலிருப்பது ஒரு குறையே. துரைத்தனத்தாரது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் வரவேற்கிறோம்.

விவசாயிகள் கடன் நிவாரணத்திற்காகவும் அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்காகவும், துரைத்தனத்தார் அவ்வப்போது இயற்றி வந்திருக்கும் சட்டங்கள், (போன நூற்றாண்டின் இறுதியிலிருந்தே) மிகவும் போற்றற்குரியன. கிராம விவசாயிகளின் வாழ்க்கையையும், நிலைமையையும், வசதிகளையும் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு துரைத்தனத்தாருக்கு என்றென்றும் உண்டு. பஞ்ச நிலை நிவாரணத்திற்காகத் துரைத்தனத்தார் அவ்வப்போது சென்ற நூற்றாண்டிலிருந்தே நியமித்து வந்திருக்கும் பலவித பேரறிவாளிகள் கொண்ட கமிஷன்களும், அவர்களது குறிப்புகளும் யோசனைகளும், அதனை ஒத்துத்

துரைத்தனத்தார் வகுத்து வரும் வழிகளும் மிகவும் போற்றற்குரியவை. நிலங்களின் தன்மையைக் காத்தற் பொருட்டும், நிலங்கள் அளவில் மிகக் கெடாதவாறு காத்தும், அதற்கு வேண்டிய முயற்சிகளை துரைத்தனத் தார் செய்து வருவதும் போற்றற்குரியது. விவசாய அபி விருத்திக்காக ஆராய்ச்சிசாலைகளும், கால்நடைச்சாலை களும், இராப்பகலாக வேலை செய்து வருவதும் போற்றத் தக்கது.

இவ்வளவெல்லாம் இருந்தாலும் நமது கிராமத்து வறுமை நிலையைக் கவனிக்கும் பொழுது, நாம் சாதிக்க வேண்டிய காரியங்கள் இன்னும் அநேகம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. துரைத்தனத்தாருக்குத் தூக்கம் என்பது இருக்கவே கூடாது. ஒரு கண் தூங்கி விட்டால் எத்தனையோ சேதங்கள் எங்கெங்கோ ஏற்பட்டுவிடும். அந்த நிலையிலிருக்கிறோம் நாம்; ஆனால் நமக்கு உற்ற துணை யொன்று மிருக்கிறது; அதுதான் காந்தீயம்.

# 11

## நாட்டின் வியாபாரம்

நமது நாட்டின் கிராமத்துப் பொருளாதார வாழ்க்கை முறையில் எவ்வளவோ பலவீனங்கள் காணக் கிடக்கின்றன. அதில் ஒன்று அநுபவத்திலிருக்கும் வியாபார முறையும் வர்த்தக முறையும். பயிர் விளைவிப்பவனுக்கும் வாங்குபவனுக்கும் மத்தியில் எத்தனை எத்தனையோ அனாவசியமான வியாபாரிகள். பொருளைச் சேகரம் செய்வதற்கும் பொருளைப் பிரிப்பதற்கும் விளம்பரம் செய்வதற்கும் வாங்குபவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும் எவ்வளவோ வியாபாரிகள் வேண்டும். ஆனல் இதைத்தவிர பல்வேறு வியாபாரிகள் ஏற்படும் பொழுது, பொருள் விலை அநியாயமாக உயருகிறது. அந்த அதிக விலையினுல் உண்டான லாபம், அந்தப் பொருளுக்குரிய விவசாயியைப் போய்ச் சேருவதில்லை. மத்தியில் உள்ள ஏராளமான வியாபாரிகளைப் போய்ச் சேருகிறது. இதைக் கொண்டுதான் கிட்டிங், டார்லிங் போன்ற சிறந்த ஆசிரியர்கள், இந்திய விவசாயி அதிகம் லாபம் கிடைக்கக் கூடிய காலத்தில்தான் அதிகம் நஷ்டப் படுகிருன், என்று எழுதினுர்கள்.

சிதறிக் கிடக்கும் பொருள்களைத் திரட்டி, பெருக்கி வகை வகையாகப் பிரித்து, தகுந்த பக்குவத்துடன், அவற்றை விரும்பும் மக்களிடம், அவைகளைக் கொண்டு சேர்க்கும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படவேண்டும். அதேமாதிரி விவசாயி விரும்பும்சாமான்களை, குறைந்தபட்ச விலைக்கு வாங்கிக் கொடுப்பதற்குத் தனித்தனிக் கூட்டுறவுச் சாலைகள் வேண்டும். கூட்டுறவுச் சாலைகள் சரியான முறையில் இயங்கினுல்தான், ஆயிரக் கணக்கில் மத்தி

யில் வரும் வியாபாரிகளின் நிபந்தனைகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும்விவசாயிகள் தங்களைப்பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்தக் கூட்டுறவு வியாபாரச் சாலைகள் தான் விவசாயிக்குப் பண உதவி அளிப்பதன் மூலமோ, அல்லது பொருள் நஷ்டம் ஏற்பட்டால் அதைத் தாங்குவதன் மூலமோ விவசாயிகள் நிலைமைக்குப் பங்கம் வராமல் காப்பாற்ற முடியும். இரண்டுவிதமான கூட்டுறவு வியாபாரச் சாலைகள் இந்திய நிலைமையில் மிக அவசியம்—(1)பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு வியாபாரச் சாலை (2) பொருள் விரும்புபவர் கூட்டுறவுச் சங்கம். கிராம இந்தியாவின் பல்வேறு இன்னல்களைப் போக்க வல்லது, இந்தக் கிராமவாசிகளின் கூட்டுறவுக் கொள்கை. இந்தக் கொள்கையை அநுசரித்து பல்வேறு தேசங்கள் முன்னுக்கு வந்திருக்கின்றன. இந்தக் கூட்டுறவு முறைதான் நமது கிராமப் பொருளாதாரத்தின் பல பலவீனங்களைப் போக்க வல்லதும் நமது கடைசி நம்பிக்கையுமாகும். ஆங்காங்குள்ள பிரமுகர்கள் தாராள மனப்பான்மையுடன் இத்தகைய நிலையங்களை வளர்க்க வேண்டும். துரைத்தனத் தாருடைய கண்காணிப்பும் ஆதரவும் நிறைய வேண்டும்.

# 12

## மக்கள் சக்தி

எவ்வளவோ கஷ்டங்கள் கிராம இந்தியாவைச் சுற்றிப பின்னிக் கிடந்தாலும் அதனால் நாம் அதிகமாகப் பாதிக்கப் பட வேண்டிய அவசியமில்லை; நம்பிக்கைகளும் நாட்டின் பலவீனங்களைச் சுற்றிச் சிதறிக் கிடக்கின்றன. அது நாட் டின் பெரும் பாக்கியமே யாகும்.

நாட்டில் ஒரு புத்துயிர், ஒரு புது விழிப்பு உண்டாகி வருகிறது. அது நாம் யாவரும் பார்க்கும் ஒரு நல்ல காலத் தின் அறிகுறி. சுதந்திர இந்தியா, நமக்குக் கிடைத்திருக் கும் ஒரு அந்தஸ்தைப்பற்றி அறிந்ததிலிருந்து உண்டாகியி ருப்பது அந்த விழிப்பு. அந்த விழிப்பே போதும், நாட் டின் எல்லா நலங்களையும் கொண்டு தருவதற்கு. நமது நாட்டை, எல்லாவித முறைகளிலும் சிறந்த நாடாக்க வேண்டும் என்று மக்கள் கங்கணம் கட்டிக் கொண்டால் போதும்: அதற்கு மீறிய சக்தியில்லை. எல்லாவிதமான பலவீனங்களும் அற்று விடும்.

ஆச்சாரிய விநோபாபாவேயின் பூமிதான இயக்கம், கதர் இயக்கம், அநேக சேவை இயக்கங்கள். கூட்டுறவு இயக்கங்கள், பெரும் பெரும் சேவை ஸ்தாபனங்கள், துரைத்தனத்தாரின் பெரும் திட்டங்கள், சமூகத் திட்டங் கள், ஐந்தாண்டுத் திட்டங்கள், தேசிய சேவை விடுதிகள், இவை கிராமப் பொருளா தாரத்தைச் சிறப்பிக்கும் வண் ணம் அமைந்திருக்கின்றன.

மஹரிஷி விநோபாபாவே கொண்டு வந்திருக்கும் பூமி தான இயக்கம் காந்தியத்தின் ஒரு ஒப்புயர் வற்ற சின்னம்.

உலகம் கண்டறியாத ஒரு சிறந்த சாதனை. அவர் கால் நடை யாத்திரைகள் ஒரு புது சரித்திரத்தை உண்டு பண்ணி வருகின்றன. நிலமற்று அவதிப் படுபவன் சமா தான, அமைதி நிறைந்த முறையில் நிலம் அடைவதே, நாட்டின் செழிப்புக்கு அஸ்திவாரக் கல்லாக அமைகிறது. 'தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில், ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற கவிஞனது தீர்க்க தரிசனத்திற்கு இணங்க, பூமிதான இயக்கம் வெற்றிபெரும் பொழுது ஒவ் வொரு இந்திய மகனும் நாட்டில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வல்ல நிலத்தை உடையவனாகிறான். நமது நாட் டின் பண்பாட்டில் ஊன்றிவளர்ந்து வரும் இந்த இயக்கத் தின் வெற்றி நாளை இனிது எதிர்பார்ப்போம்.

அனுபந்தம்—1

# கிராம விளைபொருள்கள்

எந்த விதமான பிரவர்த்திக்கும் சமுதாயத்தில் இராஜாங்கத்தினது நேரடியான பரிபூரண ஒத்தாசை அவசியம்; அது பயிர்த் தொழில் சம்பந்தப்பட்ட மட்டிற்கும் மிகவும் அதிகம்.

இயற்கையின் பல்வேறு கால மாறுதல்களைக் கவனித்து விவசாயம் நடக்கிறது. தவறிப்பெய்த ஒரு மழை விதைக்கப்பட்ட ஒரு இடத்தையோ, கதிர் நிறைந்து நிற்கும் ஒரு இடத்தின் வளமையையோ எவ்வளவோ குறைத்துவிடலாம். பெய்ய வேண்டிய மழை பெய்யாத காரணத்தால் எவ்வளவோ வயல்கள் தரிசு நிலமாய்க் காட்சி அளிப்பதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். காற்று கொஞ்சம் சீறி அடித்தால் பாதிக்கப்படுவது இரும்புத் தொழிற்சாலைகளல்ல; கிராமத்துப் பயிர்களே. ஆகவே, ஒவ்வொரு நிமிடத்திலும் இயற்கையின் போக்கை ஒட்டி நடத்தப்படும் கிராம விவசாயத்திற்குப் பூரண ஆதரவு அவசியம்.

அநேக சமயங்களில் இயற்கைதான் விவசாயத்தை நடத்தும் அதிகாரியும் ஆகிறாள்.

ஒரு குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தில் இருந்து எவ்வளவு விளைபொருள்கள் கிடைக்குமென்பதை மனிதன் தன் புத்தியில் நிர்ணயிக்க முடியாது. மேனி குறையலாம் அல்லது கூடலாம்; பயிர்கள் நோயடிக்கப்படலாம். விளைபொருள்களின் அளவை, மழை நிலைகளை நீக்கிப் பார்த்தாலும் இயற்கையே நிதானிக்கிறாள். விளை பொருள்கள் விவசாயிக்குக் கட்டுப்பட்டதல்ல.

அடுத்தபடியாக ஒரு குறிப்பிட்ட நிலத்திலிருந்து, பல்வேறு பொருள்கள் எடுக்கப்பட்டாலும், அப்பொருள்களின் சம்பந்தம் விவசாயிக்குக் கட்டுப்பட்டு நிற்கவில்லை. எவ்வளவு தானியத்துக்கு எவ்வளவு வைக்கோல்தான் சேரும் என்று யாரும் நிர்ணயிக்க முடியாது. எவ்வளவு பருத்தி விதை எவ்வளவு பஞ்சுடன் சேறும் என்றும் சொல்ல முடியாது. மேனாட்டு ஆசிரியரான ஹெண்டர்சன் வெகு அழகாக எழுதினார், 'மனிதன் எவ்வளவு மண்டியிட்டுப் பார்த்தாலும், இத்தகைய விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியாது' என்று.

விவசாயத்தின் விளைபொருள்கள் எல்லாம் அநேகமாக மேற்சொன்ன மாதிரி கூட்டுப் பொருள்கள். அதில் ஒன்றின் உற்பத்தியை மட்டும், கூட்டவோ அல்லது குறைக்கவோ (வேண்டியதற்குத் தகுந்தபடியும் விலைக்குத் தகுந்தபடியும்) விவசாயியினால் முடியாது. ஒன்றை அதிகம் உற்பத்தி செய்யவேண்டுமானால் மற்றொன்றையும் அதிகம் உற்பத்தி செய்துதானாகவேண்டும். அதற்குள்ள விலைவாசிகளில் ஏற்றம் இறக்கத்தையும் தாங்கித்தான் ஆகவேண்டும்.

கடைசியாக விவசாயம் மற்றைய தொழில்கள்போல் ஒரு தொழில் முறையல்ல; அது ஒரு வாழ்க்கை முறை. நம் நாட்டைப் பொறுத்தவரையிலும் அதுவே நாட்டின் அடித்தளமாகவும் அமைகிறது. பல்வேறு கைத்தொழில்களும், கிராமத் தொழிற்சாலைகளும் விவசாயத்தை ஒட்டியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

பயிர்களை மூன்று முக்கிய பிரிவுகளாகச் சொல்லலாம். (1) உணவுப் பயிர் (நெல், கோதுமை) (2) வியாபாரப் பயிர் (பருத்தி, ரப்பர்) (3) பானகப் பயிர் (தேயிலை, காப்பி).வேறுவகையாகவும் பயிர்களைப்பிரிப்பர்; (1) வியாபாரப் பயிர் (2) வீட்டுப் பயிர் (3) வியா

பாரம்—வீட்டுப் பயிர் என்று ஒரு முறை. மற்ரெரு பாகுபாடு கால நிலைகளைக் குறித்துச் சொல்லுவது. மழை இளவேனில் பயிர், (நெல்), குளிர்ப்பயிர் (கோதுமை), ஆண்டுப் பயிர் (கரும்பு). எவ்வகையில் பிரிக்கப்பட்டாலும் நமது கிராமங்களிலுள்ள முக்கியமான பயிர்கள் நெல், கோதுமை, சோளம், பயறு, ஈருள்ளி, பருத்தி, சணல், கரும்பு, நிலக்கடலை, தேயிலை, காப்பி, புகையிலை, ரப்பர் ஆகும்.

**இந்திய கிராமங்களின் விளை பொருள்கள்**

**(1950—51 வருஷத்திய புள்ளி விவரங்கள்)**

| பயிர் | ஏக்கரா (பத்து லட்சங்களில்) | சாகுபடி (பத்து லட்சங்களில்) |
|---|---|---|
| நெல் | 75·46 | 20·40 டன்கள் |
| கோதுமை | 23·98 | 6·59 ,, |
| சோளம், வரகு, கம்பு வேறு தான்யங்கள் | 93·62 | 17·73 ,, |
| பயறு | 19·39 | 3·77 ,, |
| ஈருள்ளி, மல்லி, இஞ்சி முதலியவை | 26 | 4·01 ,, |
| பருத்தி | 13·86 | 2·93 |
| | (382 பவுண்டுகள் அடங்கிய பேல்கள்) | |
| சணல் | 1·45 | 3·30 |
| | (400 பவுண்டுகள் அடங்கிய பேல்கள்) | |
| நிலக்கடலை | 10·47 | 3·33 டன்கள் |
| வேறு எண்ணை விதைகள் | 15·51 | 1·64 ,, |
| தேயிலை | 0.77 | 585·03 பவுண்டுகள் |
| காப்பி | 0·22 | 490·29 ,, |
| புகையிலை | 0·84 | 0·25 டன்கள் |
| ரப்பர் | 0·16 | 33·77 ,, |

இவ்வளவு இருந்தாலும், இன்னும் சாகுபடிக்கு, நீர்ப்ாசனத் திட்டங்களின் வசதியால், எவ்வளவோ ஏக்கரா

நிலங்கள் வரவேண்டியிருந்தாலும், நாம் உயர்ந்த அளவுள்ள பொருள்களை கிராமத்து மண்ணிலிருந்து எடுக்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. அதைக் கீழ்க்கண்ட அட்டவணை கூறும்.

**ஒரு ஏக்கரா நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம்—பவுண்டுகளில்**

| தேசம் | கோதுமை | நெல் | கரும்பு | பருத்தி |
|---|---|---|---|---|
| எகிப்து | 1,918 | 2,998 | 70302 | 535 |
| ஜப்பான் | 1,713 | 3,444 | 47,534 | 196 |
| அமெரிக்கா (U. S. A.) | 812 | 2,185 | 43,270 | 268 |
| சீனு | 989 | 2,433 | — | 204 |
| இந்தியா | 660 | 1,240 | 34,944 | 89 |

நாட்டுக்கு நாடு நில ராசிகள் முன் பின் இருந்தாலும் இவ்வளவு தூரம் நமது நாட்டில் விளை பொருள்களின் அளவு பாதிக்கப்படக் காரணம் இல்லை. கிராமப் பொருள்கள் உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சி நிலையங்களும் வசதிகளும் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு, நமது மண்ணிற்கு ஏற்கும்படி அமையும் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

பத்தொன்பதாம் நாற்றாண்டு முழுவதும் இந்திய விவசாயம் கவனிப்பாரற்றுக் கிடந்ததே இந்த நிலைக்குக் காரணமாயிருக்கலாம். ஆங்காங்கே, அவ்வப்போது தோன்றி வந்த பஞ்சங்களும் இந்த நிலையைத் தந்திருக்கக் கூடும். விஞ்ஞான அறிவு கொடுத்துவரும் அரிய சாதனைகளை நாம் அவ்வப்போது நமது விவசாயத்திற்குள் கூடுமான மட்டும் எடுத்துக் கொள்ளத் தயங்கக் கூடாது. மேலை நாடுகளில் அந்த முறைகள்தான் மிகுந்த பலனைக் கொடுத்து வந்திருக்கின்றன.

மிகுந்த துண்டுபட்ட நிலங்களில்தான் இந்திய விவசாயம் நடந்து வருவதும் இதற்கு ஒரு காரணமாயிருக்க

லாம். ஒரு விவசாயிக்கு நமது கிராமத்தில் 5 ஏக்கரா நிலங்கள் இருந்தால் அவை சேர்ந்து இருப்பதில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஐந்து இடங்களில் இருக்கும். இந்தக் குறை, சட்டங்களின் மூலமும், பரிவர்த்தனை செய்வதன் மூலமும், கிராமப் பஞ்சாயத்துகள் மூலமும், நிவர்த்திக்கப்பட வேண்டும். நமது நாட்டிற்குத் தகுந்த நிலையில், நமது பண்பாட்டிற்குத் தக்கபடி ஒரு விவசாயிக்கும் அவனது குடும்பத்தினருக்கும், அவர்களது உழைப்பாலும், அவர்களது வேலைப் பையன்களின் உழைப்பாலும் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் பெறக்கூடிய அளவில் நில அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்குக் குறைந்த அளவுள்ள துண்டுகளைச் சேர்த்து, இலட்சிய அளவு நிலங்களாக மாற்றி அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்திய விவசாயம் செவ்வனே நடக்க இயலும். சேர்க்கப் பட்ட துண்டுகள் மறுபடியும் பிரிக்கப்படாமலிருக்க வேண்டிய பாதுகாப்புகளும் செய்யப்பட வேண்டும்.

பஞ்சாப் மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் துண்டு நிலங்கள் அங்கும் இங்கும் சேர்க்கப்பட்டன. 1920-ஆம் வருஷத்திலிருந்து 1928-ஆம் வருஷம் வரை இச்சங்கங்கள், அம் மாகாணத்தில் மட்டும் 1,62,000 ஏக்கரா நிலங்களை ஒழுங்குபடுத்தியிருக்கின்றன. 1936—41-ஆம் வருஷங்களில் இச்சங்கங்கள் 1,30,000 ஏக்கரா நிலங்களை அங்கு ஒழுங்குபடுத்தியிருக்கின்றன. மத்தியப் பிரதேசத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்த முறையில் ஏராளமான நிலம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. பழைய பரோடாச் சட்டங்கள், மத்தியப் பிரதேசத் துண்டு நிலங்கள் சேர்மானச் சட்டம் (1928), பஞ்சாப் துண்டு நிலச் சேர்மானச்சட்டம் (1936), உத்திரப்பிரதேசத் துண்டு நிலங்கள் சேர்க்கும் 1939-ஆம் வருடத்திய சட்டம், 1947-ஆம் வருடத்திய பம்பாய் துண்டு நிலச் சேர்மானச்

சட்டம், 1948 கிழக்கு பஞ்சாப் நிலப் பாதுகாப்பு, துண்டு நிலச் சேர்மானச் சட்டம் ஆகியவை இத்திசையில் துரைத் தனத்தார் சாதித் திருக்கும் சில அரிய காரியங்கள்.

ஆங்காங்கு நிலத்தின் வளம் பலபல இடங்களில் குறைந்து வருவதும் விளை பொருள்களின் அளவு குறைவுக் குக் காரணமாகும். காடுகள் பெருவாரியாக அழிக்கப்பட்ட நிலையில், தகுந்த பாதுகாப்பின்றி, மிக்க வளமும், நீரைச் சேர்த்து வைத்துக்கொள்ளும் இயல்பும் உள்ள மேல் மண், காற்றினாலும் மழையினாலும் கரைக்கப்பட்டு அடித்து எடுத்துச் செல்லப்படுகிறது. மத்திம மண் மேலே வரு கிறது; அது பயிருக்கேற்ற வளம் அவ்வளவு உடையதா யிருக்க முடியாது. நீரையும் கிரகித்து வைத்துக்கொள்ளும் சக்தி அதற்குக் கிடையாது. அத்தகைய நிலையில் அதன் வழிச் செல்லும் நீர், கீழ்ப் பாங்கில் உள்ள மேல் மண்ணை யும் அடித்துச் செல்லுகிறது. விவசாயியின் கவனக் குறை வும், கால்நடைகள் தகுந்த மேய்ச்சல் தரையின்றிச் செல்லுதலும் இந்நிலையை அதிகமாக்குகின்றன. மேல் மண் வேண்டாத அளவுக்கு எடுக்கப்படுமாயின் நிலவளம் குறை கிறது; நம் ஆறுகளில் எப்பொழுதுமே தண்ணீர் எங்கெங் கெல்லாமோ மேல்மண்ணைக் கரைத்துக்கொண்டு கலங் கலாய் வந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. நம் எல்லோருடைய கவனக் குறை வுதான் இதற்கு அதிமுக்கிய காரணம். காடுகளால்தான் நிலத்தைப் பாதுகாக்க முடியும் என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. குற்றால அருவி செம்மண்ணாக வரு கிறது என்றால் உடனே மேலே காட்டு வளம் குறைச்சல் என்று நிதானித்து விடலாம். எவ்வளவோ பயிருக்கு உபயோகப்பட வேண்டிய மேல் மண் அடுத்துச் செல்லப் படுகிறது என்பதுதான் அதற்கு அர்த்தம். ஒவ்வொரு பருவத்திலும், வெள்ளம் தோறும் நாம் இக்காட்சியைப் பார்க்கிறோம்.

சதுப்பு நிலங்கள் நீங்கலாக, சுக்கு நாரிப் புல்லுக்கும், முட்செடிகளுக்கும் நாம் நம் தேசத்தில் கொடுத்திருப்பது 880 லட்சம் ஏக்கரா நிலங்கள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நிலங்களும் பயிருக்கும் தோட்டத்திற்கும் வரும்பொழுது தேசத்தின் பொருளாதார நிலை எவ்வளவு உயர்த்தப்படும் என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மத்தியப் பிரதேசத்து 1948–ஆம் வருஷத்திய நிலச் சீர்திருத்தச் சட்டமும் மத்திய பாரதத்து 1949-ஆம் வருடத்திய கோரைகள் எடுப்புச்சட்டமும் இந்தத் திசையில் துரைத்தனத்தார் எடுத்திருக்கும் சில முயற்சிகள். இந்த அரும் முயற்சிக்கு, அரிப்புப் புல்லும் முள்ளும் நிறைந்த நிலத்திலிருந்து தோட்டம் அமைக்கும் இவ்வரிய முயற்சிக்கு, நிலச்சுவான்தார்கள் தான் முன் வரவேண்டும். மத்திய சர்க்கார் ஆங்காங்குள்ள மாகாண சர்க்கார் ஆலோசனையின் பேரில், தனி ஸ்தாபனங்கள் மூலமாக பெருவாரியாகச் செலவு செய்து நிலங்களை ஆங்காங்கு திருத்தியும் திருத்த உதவி செய்தும் வரும் இம்முயற்சி பாராட்டத்தக்கது

இந்திய பூர்வீகக் கிராம அமைப்பே, அங்குள்ள பொருளாதாரம் தகுந்த முறையில் பரிணமிக்க வேண்டிய அளவில்தான் அமைந்திருக்கிறது. விவசாயியினது வீட்டிலே கோழிகளும் அன்றன்று வீட்டிற்கு வேண்டிய சில காய்கறிகளும், தென்னையும் வாழையும் வளர்க்கப்படுகின்றன. அவனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் வருஷத்திற்குப் போதுமான நெல் பயிர்; தென்னை, மா, பலா, புளி, எலுமிச்சை வேண்டிய அளவுக்கு நிறைந்த ஒரு தோட்டம், இதைத் தவிர ஒரு இறவைப் புஞ்சை. அதில் மிளகு வத்தலும், சுருள்ளியும், காய்கறிகளுடன் கலந்து காலத்திற்கு ஏற்பப் பயிரிடப்படும். நிலத்திலிருந்தும் காற்றிலிருந்தும் வெவ்வேறு பொருள்கள் மட்டும் வேண்

டிய காய்கறிகள், ஒரே தோட்டத்தில் ஒரே சமயத்தில், செடி விட்டுச் செடியாகப் பயிரிடப்படும்பொழுது நிலத்தின் வளமை நன்கு பாதுகாக்கப்படுகிறது. இதை நம்முன்னவர்கள் நன்கு அறிந்திருந்தனர். 'ஒவ்வொருவருக்கும் ஒரு பெருத்த தோட்டம்; அதில் ஒரே விளை பொருள்' என்பது மேலை நாட்டினருக்கு ஏற்றதாயிருக்கலாம்; நமது நாட்டிற்கு அது உகந்ததல்ல.

நாட்டில் அடிக்கடி தோன்றி வந்த பஞ்ச நிலைகளும் நமது விளை பொருள்கள் குறைவிற்கு மற்றொரு காரணம். 1865-இல் வந்த ஒரிஸாப் பஞ்சம் நாடெங்கும் பரவியது, 5 கோடி மக்கள் பாதிக்கப்பட்டனர்; 10 லட்சம் பேர் மாண்டனர். ராஜபுதனத்திற்கும் பீஹாருக்கும் பஞ்சம் பரவியது. சூழ்நிலையை ஆராயத் துரைத்தனத்தார் ஸர் ஜான் காம்ப்பெல் என்பவரை நியமித்தார்கள். உயிர்ச் சேதமில்லாமல் தேசத்தை எவ்வகையிலும் காப்பாற்ற வேண்டியது துரைத்தனத்தார் பொறுப்பு என்று அவர் துரைத்தனத்தாரைக் கண்டித்தார்.

1876—8-இல் தென்னாட்டிலிருந்து புறப்பட்டு ஒரு பெரும் பஞ்சம் நாடெங்கும் பரவியது. 52 லட்சம் ஆட்கள் மாண்டனர். பஞ்ச நிவாரண ஆலோசனைக்காக ஸர். ரிச்சர்ட் ஸ்டிரேச்சி என்பவர் தலைமையில் ஒரு சபை துரைத்தனத்தாரால் அமைக்கப்பட்டது. இந்தியப் பஞ்ச நிவாரண முறையை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர் அவர் தான். வருஷா வருஷம் துரைத்தனத்தார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் பஞ்ச நிவாரணத்திற்காக ஒதுக்கி வைக்கவேண்டும் என்று ஸ்டிரேச்சி குறிப்பிட்டார். ரயில் வசதிகள் எல்லாப் பக்கமும் அமைக்கவும், பஞ்ச காலத்தில் வேலையில்லாத யாவருக்கும் வேலைகள் கொடுக்கத் திட்டங்கள் வகுக்கவும், கிஸ்தியைத்தள்ளிக் கொடுக்க ஏற்பாடுகளும், கடன் வசதிகளும் ஏற்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனை சொன்னார் ஸர். ஸ்டிரேச்சி. 1896—7-ல் மீண்டும் பஞ்சம்

வந்து நாடெங்கும் பாதித்தது. துரைத்தனத்தார் ஸர். ஜேம்ஸ் லையால் என்பவரை நிலைமையை அறிய நியமித்தார்கள். தொழிலாளிகளுக்குச் சிறந்த வசதிகள் செய்து கொடுக்கவும், கிராமங்களில் உதவி நிலையங்கள் திறக்கவும் அவர் ஆலோசனை சொன்னார். ஆனால் அதற்குள் நாடு மீண்டும் பஞ்சத்தில் ஆழ்ந்தது (1899—1900). துரைத்தனத்தார் ஸர் அந்தோணி மாக்டோனல் என்பவரை ஆலோசனைக்காக நியமித்தார்கள். மக்களுக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். கடன் உதவிகள், உடனடியாக கிஸ்தியைத் தள்ளிக் கொடுத்தல், விவசாயத்திற்கு வேண்டிய உதவிகள், ஆங்காங்குள்ள மக்களின் உதவியை நாடுதல், அவர்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டும் உதவி செய்தல், கூட்டுறவுச் சங்கங்கள் வளர்த்தல், நீர்ப்பாசன வசதிகள் அமைத்தல் இவை அவர் ஆலோசனை சொன்ன சில முக்கிய விஷயங்கள். துரைத்தனத்தாரும் அதை ஒட்டித் தங்கள் பஞ்ச நிவாரணக் கொள்கையை அமைத்தனர். அதற்குப் பின்னும் அவ்வப்போது பஞ்சத்தின் குறிகள் நாட்டில் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. கடைசியாக எல்லாவற்றிலும் மேலாக வந்தது 1941—45-இல் சூறை ஆடிய வங்கப் பஞ்சம். தொடர்ந்து மழை இன்மை, யுத்த பீதி, அந்நிய ஆட்சி, பொருள்கள் பதுக்கப்படல், திடீரென்று வெள்ளப் பெருக்குகள், விலைவாசிகளின் ஏகத்தாண்டவம், இவை பஞ்ச நிலையை அதிகப்படுத்தின. வெளியிலிருந்து தானியம் வர ஏதுவில்லாத ரீதியிலும், மக்கள் நம்பிக்கை இழந்து, இராஜாங்கத்திற்கும் மக்களுக்கும் சரியான தொடர்பில்லாதிருந்த ரீதியிலும், மக்கள் லட்சக் கணக்கில் மாண்டனர். இரகசியமாகச் சேகரம் செய்யப்பட்ட சாமான்கள் கொள்ளை விலைக்கு விற்கப்பட்டன. கல்கத்தா நகரில் வண்டிப்பாதையில் விழுந்து கிடக்கும் அரிசிகளைப் பொறுக்குவதற்குப் பெண்களும் குழந்தை

களும் கூடினர்; மறுநாள் அவரவர்களின் பிரேதங்கள் ரஸ்தாக்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன என்று பின்னுல் துரைத்தனத்தார் நியமித்த ஸர்ஜான் வுட் ஹெறட்டே எழுதினுர். அரசாங்கம் பெரிதும் தவறிவிட்டது என்று வன்மையாகக் கண்டித்தார். வுட்ஹெறட் சமுதாயத்திலுள்ள மக்கள் யாவருக்கும் உணவைச் சேகரம் செய்து கொடுப்பது எந்தவித அரசாங்கத்திலும் முதல் கடமை என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினுர்.

வேலையில்லாத் திண்டாட்டமே பஞ்ச நிலைக்கு ஒரு சமுதாயத்தைக் கொண்டு விடலாம். அப்படியில்லாமல் யாவருக்கும் வேலை அமைத்துக் கொடுக்க வேண்டியதும் துரைத்தனத்தாரது முக்கிய பொறுப்பாகும். பஞ்சத்தின் குறிகள் தோன்றும் பொழுது உடனடியாகக் கிராமங்களில் இலவச உணவு, மருத்துவ விடுதிகள் ஏற்படுத்த வேண்டும். பஞ்ச நிவாரணச் சாதனைகள் துரைத்தனத்தார் மட்டுமல்ல, மக்கள் யாவருடைய பொறுப்புமாகும். களவுகள் அதிகரித்தல், வேலை இன்மை, பிச்சைக்காரக் கூட்டங்கள் அதிகரித்தல், மழை பின்னேக்குதல் இவை பஞ்சத்தின் சில அறிகுறிகளாகும்.

கடைசியாக விளைபொருள்களின் அளவு நாட்டில் பாதிக்கப்படுவதற்குக் காரணம் நாட்டின் பெருவாரியான மக்கள் கடன்பட்டிருத்தல் ஆகும். கடன் பட்டிராத இந்திய விவசாயியைப் பார்ப்பது மிகவும் அபூர்வமாயிருக்கிறது என்று ஆசிரியர்கள் எழுதுகிருர்கள். ஒரு சிலரைத் தவிர, யாரேனும் விவசாயிகள் கடன் பட்டில்லையானுல் அதற்குக் காரணம் கடன் கொடுக்க ஆட்கள் இல்லை என்பதுதான். ஸர் பிரடரிக் நிக்கல்சன் மதருஸ் மாகாணத்தில் மட்டிலும் 45 கோடி ரூபாய்க்கு விவசாயிகள் கடன் பட்டிருக்கின்றனர் என்று 1895ல் நிர்ணயித்தார். 1911ம் வருஷம் இந்திய தேசம் முழுவதுக்கும் விவசாயி

களின் கடன் 300 கோடி ரூ, என்று தீர்மானித்தார்கள். 1923—4-ல் இந்தியா முழுமைக்கும் 1000 கோடி ரூபாய் விவசாயிகளின் கடனுயிருக்கலாம் என்று மேல் கால்ம் டார்லிங் நிர்ணயித்தார். டாக்டர் பி. ஜே. தாமஸ் 1941-ல் சமஸ்தானங்கள் நீங்கலாக இந்திய தேசத்தில் 1200 கோடி ரூபாய் கடன் பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டார். டார்லிங் காட்டுவது போல், நிலச்சீர்த்திருத்தத்திற்காக வாங்கப்பட்டது 5% க்கும் குறைவான தொகையே. கடன் தொகை அடைக்கப்பட முடியாமல் பெருகி வருவது இரண்டாவது அம்சம். குறைந்த வருமானமுள்ளவர்கள் கடன் படும் பொழுது அதிலிருந்து எளிதில் மீள வழியில்லை. நிலமும் போய் சுதந்திரமும் போய்விடுகிறது. அளவறிந்து வாளாத வாழ்க்கையின் முடிவுதான், பெரு வாரியான நம் கிராமத்து மக்கள் கடன் பட்டிருத்தலின் முக்கிய காரணம்.

துரைத்தனத்தாரிடமாவது அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடமாவது விவசாயி கடன்படும் பொழுது, அவனது நிலைமையில் ஒரு சிறிதாவது தெளிவு உண்டு. வட்டிக்குக் கொடுக்கும் முதலாளிகள் கையில் அவன் பணம் வாங்கும் பொழுது, வாங்கும் தொகையும், வட்டியின் போக்கும், விவசாயிக்குப் பெரிதும் கஷ்டம் விளைவிக்கின்றன. அங்கங்குள்ள கிராமத்துப் பெரிய மனிதர்கள் இம்மாதிரியான பண வழக்குகளை ஆங்காங்கு முன் தீர்த்து வைத்தனர். வட்டி அதிகப்பட்டுப் போய்விடாமலும் முதலைத் திரும்பக் கொடுப்பதற்குத் தகுந்த தவணைகள் கொடுத்தும் வந்தனர். ஆனால் இந்த நிலைமை பின்னர் பெரிதும் மாறிற்று. கிராமத்துப் பெரிய மனிதர்களிடம் செல்லும் வழக்கம் நின்று வருகிறது. அதனால் தகுந்த பாதுகாப்புகளோடு இல்லாத கிராமவாசிகளின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது.

விவசாயிக்கு ஆதரவு கொடுப்பதற்காக, துரைத்தனத்தார் எவ்வளவோ சட்டங்களைத் தகுந்த பாதுகாப்பு கொடுக்கும் வண்ணம் அமைத்திருக்கிறார்கள்.

அதில் வெகு முக்கியமானது தட்சிணத்து விவசாயிகளின் கடன் நிவாரணச் சட்டம் (1878). இதன் பயனாகக் கடன்கள் கொடுக்கப்படாத காலத்து, அதன் காரணமாகக் கடன் பட்டார் சிறை செல்வது தடுக்கப்பட்டது. கடன்கள், எத்தகைய நிலைகளில். எவ்வாறாக எந்தெந்த நிபந்தனைகளுடன் ஏற்பட்டது என்று நீதி மன்றத்தார் பார்க்கவேண்டும் என்றும் ஏற்பட்டது. அநாவசியமான வட்டி வீதத்தையோ, நில விற்பனையையோ சட்டம் தடுத்தது.

வங்காளத்திலும், ஒரிஸாவிலும், பம்பாயிலும் இச்சட்டங்கள் இயற்றப்பட்டன. கடன் கொடுப்போர் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டியது, வட்டி வீதத்தின் எல்லைகளை ஒழுங்கு செய்வது, என்றெல்லாம் ஏற்பட்டன.

கடன் நிவாரணக் கோர்ட்டுகள் அநேகமாக எல்லா மாகாணங்களிலும் ஏற்படுத்தப்பட்டன.

பண்புப் புத்தகம்

1809

DR. T. P. M. LIBRARY